Registered as a NewsPaper

விலை ரூபா 7.00

# ஈழநாதம்

EELANATHAM மக்கள் நாளிதழ்

பக்கங்கள் - 08

நாதம் 14 திருவள்ளுவர் ஆண்டு 2034 ஆனி - 06 21-06-2003 சனிக்கிழமை ஓசை 123

**ADVANCER**
**Computing Institution**

A/L பரீட்சை எழுதிமுடித்த மாணவர்கள், அலுவலகப் பணியாளர்கள் இலகுவாகப் பயில **Ms-Office**, ஆரம்பக் கணினி அறிவைக் கொண்டவர்களுக்கு **Software**, எழுதுவதற்குப் பயில **Visual Basic Programming** கற்பிக்கப்படுகின்றது. (சனி, ஞாயிறு வகுப்புக்கள்) ஆரம்பம்: 21.06. 2003 (இன்று) சனிக்கிழமை. அனுமதிகள் முன்கூட்டியே பெறப்படவேண்டும். மேலதிக தொடர்புகட்கு. (சி-7754) நிர்வாகம்.

## இடைக்கால நிர்வாக சபை வரைபின்றி பேச்சுவார்த்தை குறித்துப் பரிசீலிக்க இயலாது

### அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்



இடைக்கால நிர்வாக கட்டமைப்பு தொடர்பான தெளிவான வரைபொன்றை சிறிலங்கா அரசு முன்வைத்தால் மட்டுமே சமாதானப் பேச்சுவார்த்தைக்கு திரும்புவது குறித்து மறுபரிசீலனை செய்ய முடியும் என விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான அன்ரன் பாலசிங்கம் தெரிவித்துள்ளார்.

புலிகளை சமாதானப் பேச்சுக்களை மீள ஆரம்பிக்கவருமாறு பிரதமர் நேற்று முன்தினம் நாட்டு மக்களுக்கு உரையாற்றியமை தொடர்பாக தமிழ் நெற் இணையத் தளத்திற்கு கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

பிரதமர் பரிந்துரைக்கும் இடைக் கால கட்டமைப்பு தொடர்பான விளக்கமான விபரங்களை அவர் தனது உரையில் வெளியிடவில்லை. இடைக்கால கட்டமைப்பு தொடர்பாக டோக்கியோ மாநாட்டில் தெரிவித்த கருத்தையே அவர் மீண்டும் தெரிவித்துள்ளார். இடைக் கால நிர்வாகத்தை அமைக்கும்

(08ஆம் பக்கம் பார்க்க)

## சமாதானத்தை வலியுறுத்தி வவு.வில் பேரணிக்கு ஏற்பாடு

### யூலை முதலாம் திகதி நடைபெறும்

(வவுனியா)

சமாதானத்தை வலியுறுத்தி வவுனியாவில் மாபெரும் பேரணி ஒன்று நடத்தப்படவுள்ளது.

வவுனியாவில் உள்ள மக்கள் அமைப்புக்களும், சகல மத அமைப்புக்களும் இணைந்து பாரிய அளவில் இப்பேரணியினை நடத்துவதற்கான ஏற்பாட்டினைச் செய்துள்ளன.

எதிர்வரும் யூலை மாதம் முதலாம் திகதி இப்பேரணி நடத்தப்படவுள்ளது.

யுத்த நிறுத்தம் தொடர்ந்தும் அமுல்படுத்தப்படவேண்டும். பேச்சுக்கள் உடனடியாக ஆரம்பிக்கப்பட வேண்டும். யுத்தம் தொடரக்கூடாது ஆகிய கோரிக்கைகளை முன் வைத்தே இப்பேரணி நடத்தப்படவுள்ளது.

கண்டி வீதி பௌத்த விகாரையில் இருந்து ஒரு பேரணியும், றம்பைக்குளத்தில் இருந்து ஒரு பேரணியும் ஆரம்பமாகி வவுனியா நகர சபை மைதானத்தை சென்றடைந்து அங்கு வைத்து கோரிக்கை மகஜர்கள் சிறிலங்கா சனாதிபதிக்கும், பிரதமருக்கும், விடுதலைப் புலிகளுக்கும் அனுப்பிவைக்கப்படவுள்ளன. (28)

# ரணிலின் இடைக்கால நிர்வாகம் குறித்த அறிவிப்பு உதவுவோரை திருப்திப்படுத்தும் நோக்கிலானதே!

### அரசியல் விமர்சகர்கள் தெரிவிப்பு

(கொழும்பு)

**பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாக சபை ஒன்றை அமைக்கத் தயார் எனத் தெரிவித்துள்ளதோடு அது குறித்துப் பேச்சுவார்த்தைகளை நடத்தப் புலிகள் முன்வர வேண்டும் எனக் கோரியுள்ளமையானது சிறிலங்காவிற்கு உதவி வழங்கும் நாடுகளைத் திருப்திப்படுத்தும் நோக்கிலானது என அரசியல் நோக்கர்கள் தெரிவிக்கின்றனர்.**

சிறிலங்காவிற்கு உதவி வழங்குவோர், பெருமளவு நிதியை சிறிலங்காவிற்கு உதவியாக அளிக்க முன்வந்துள்ள போதும், சமாதான முயற்சிகளில் ஏற்படும் முன்னேற்றமே சிறிலங்கா அரசாங்கத்திற்கு நிதி உதவி கிடைப்பதை உறுதி செய்யுமென்பதையும் வலியுறுத்தியுள்ளனர்.

இந்நிலையில், உதவி வழங்குவோரை திருப்திப்படுத்தும் நோக்கில் அன்றி அவர்கள் நம்பிக்கை கெடாதவகையில் சமாதானம் முன்னெடுக்கப்படுவதானதொரு தோற்றப்பாட்டை பிரதமர் ரணில் விக்கிரமசிங்க உருவாக்க வேண்டிய நிலையில் உள்ளார்.

இதன் காரணமாகவே ரணில்

(08ஆம் பக்கம் பார்க்க)

## தும்பளையில் ராணுவம் சுற்றிவளைத்துத் தேடுதல்

### மக்கள் பெரும் அசௌகரியம்

(யாழ்ப்பாணம்)

வடமராட்சி தும்பளை பகுதியில் நேற்றுக்காலை சிறிலங்காப் படையினர் திடீர் சுற்றிவளைப்புச் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

வீதியால் சென்றவர்களையும், வீடு வீடாகச் சென்றும் படையினர் இச்சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

மக்களைப் படையினர் துருவித் துருவி விசாரித்ததுடன், அடையாள அட்டைகளை கேட்டுத்துன்புறுத்தி உள்ளனர்.

(08ஆம் பக்கம் பார்க்க)

### ஹாட்லி, மெதடிஸ்த பெண்கள் கல்லூரிக்கு

## 3 மணிக்குப் பின் மாணவர்கள் செல்ல சிறிலங்கா இராணுவம் தடை

பருத்துத்துறை ஹாட்லிக் கல்லூரி, பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி என்பவற்றுக்கு மாணவர்களோ ஆசிரியர்களோ மாலை 3.00 மணிக்குப் பின்னர் செல்லக்கூடாது என சிறிலங்கா இராணுவம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

பருத்தித்துறையில் நிலைகொண்டுள்ள 524வது பிரிகேட்டின் தளத்தினுள் இவ் இரு கல்லூரிகளும் அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. வழமையாக பாடசாலை முடிவுற்றதும் விளையாட்டு மற்றும் உடற்பயிற்சிகளுக்காக மாணவர்கள் பாடசாலை விளையாட்டு மைதானத்துக்குச் செல்வார்கள். இப்பொழுது 524ஆவது பிரிகேட் இராணுவம் 3.00 மணிக்குப்பின்பாடசாலை வளாகத்

(08ஆம் பக்கம் பார்க்க)

## வவுனியா பூவரசங்குளம் பகுதியில் இந்திய இராணுவம் முகாம் அமைப்பு

### கண்ணிவெடி அகற்றுவதற்காகவாம்

வவுனியா பூவரசங்குளம் பகுதியில் இந்திய இராணுவத்தினர் முகாம் அமைத்துள்ளனர்.

அப்பகுதியில் உள்ள சிறிலங்கா இராணுவ முகாமுக்கு அண்மையாக இந்திய இராணுவத்தினர் இம் முகாமினை அமைத்துத் தங்கியுள்ளனர்.

இப்பகுதியில் புதைக்கப்பட்டுள்ள மிதிவெடிகள், கண்ணி வெடிகளை அகற்றும் பணியில் ஈடுபடுவதற்காகவே இந்திய இராணுவத்தினர் இவ்வாறு வந்து முகாமிட்டு தங்கி இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## யாழ்.இல் மீன் பிடிப்படகுகளுக்கு ராடர் பொருத்தப் பணிப்பு

யாழ்ப்பாணத்தில் மீன் பிடியில் ஈடுபடும் படகுகளில் 'ராடர்' கருவிகளை பொருத்துதல் அவசியம் என மீன்பிடி நீரியல் வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

கடலில் எதிரில் வரும் படகுகளை இரவு வேளைகளில் அறியமுடியாமையால் படகுகளுடன் மோதி விபத்துக்கள் ஏற்படுவதாக இலங்கை கடற்படையினர் தெரிவித்தமையைத் தொடர்ந்து பணிப்பாளர் இவ் வேண்டுகோளை விடுத்துள்ளார். (33)

## கைக்குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் வைமன் வீதியில் நேற்று முன்தினம் நல்லூர் கோட்ட அரசியல்துறைப் பணிமனைக்கு இனந்தெரியாதோரால் வீசப்பட்ட கைக்குண்டு நேற்றுக்காலை 7.30 மணிக்கு செயலிழக்கச் செய்யப்பட்டது. ஹெலோ றெஸ்ட் நிறுவனத்தின் கண்ணிவெடி அகற்றும் பிரிவினரால் மேற்படி குண்டு செயலிழக்கச் செய்யப்பட்டது. (33)

## வவுனியா-மன்னார் வீதியில் புதிய காவலரண்கள் அமைப்பு

(வவுனியா)

வவுனியா - மன்னார் வீதியில் சிறிலங்காப் படையினர் புதிதாக மண்ணரண்களையும், காவலரண்களையும் அமைத்து வருகின்றனர்.

இவ்வீதி நெடுகிலும் ஏற்கனவே அமைக்கப்பட்டிருக்கும் காப்பரண்களுக்கு மேலதிகமாக மண்ணரண்களும், காப்பரண்களும் அமைக்கப்பட்டுள்ளன.

படையினரின் இந்நடவடிக்கைகள் காரணமாக இப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் அச்சம் நிலவி வருகின்றது.

## கொழும்பின் முக்கிய பகுதிகளில் படையினர் சுற்றிவளைத்துத் தேடுதல்

(கொழும்பு)

கொழும்பின் முக்கியமான சில பகுதிகள் நேற்று முன்தினம் இரவு 08.00 மணிக்கு பின்னர் பொலிசாரினாலும் படையினராலும் சோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளன.

செட்டியார் தெரு, ஐந்துலாம்புச் சந்தி, கதிரேசன் வீதி, சென்றல் வீதி, விவேகானந்தா மேடு, ஜிந்துப்

(08ஆம் பக்கம் பார்க்க)

## கொழும்பு தெற்கில் பாரிய துறைமுகம் அமைக்க ஒப்பந்தம் கைச்சாத்து

(கொழும்பு)

உலகிலுள்ள பாரிய கப்பல்களும் நங்கூரமிடக் கூடியவகையில் கொழும்பு தெற்கில் புதிய துறைமுகம் ஒன்று அமைக்கப்படவுள்ளது.

இதற்கான ஆலோசனை சேவைகளை வழங்க பிரிட்டனின் பிரபல கம்பனி ஒன்று முன்வந்துள்ளது. இதற்கான ஒப்பந்தம் நேற்றுக் கைச்சாத்திடப்பட்டது. புதிய துறைமுகம் தற்போதுள்ள துறைமுகத்தை

(08ஆம் பக்கம் பார்க்க)

## வரிவிளம்பரம்

### விவசாயிகளே!

உங்கள் வீட்டுத்தோட்டத்தை வளமாக்கத்தேவையான தென்னை, பலா, மாதுளை, எலுமிச்சை (தேசி), கமுகு, கொய்யா, கொடித் தோடை, தோடை, சவுக்கு மற்றும் பல தரமான நல்லின நாற்றுக்களைக் குறைந்த விலையில் நீங்கள் பெறுவதற்கு இன்றே நாடுங்கள். ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணை, வட்டக்கச்சி. (3275)

## ஆண்டு நிறைவு விழா

(அலுவலக செய்தியாளர்)

குருகுலம், காந்தி நிலையம் ஆகிய சிறுவர் பாதுகாப்பு நிலையங்களின் ஆண்டு நிறைவு விழா இடம் பெறவுள்ளது.

குருகுலம் சிறுவர் இல்லத்தின் 43 ஆம் ஆண்டு நிறைவு விழாவும், காந்தி நிலையத்தின் 46ஆம் ஆண்டு நிறைவு விழாவும் எதிர்வரும் 23ஆம் திகதி பிற்பகல் 3 மணிக்கு கிளிநொச்சி ஜெயந்திநகர் குருகுலம் சிறுவர் இல்ல வளாகத்தில் நடைபெறவுள்ளது. (பா)

### விற்பனைக்கு

நல்ல நிலையில் உள்ள PAN DIENI -4 COMPUTER-1 ரசற் பிரின்டருடன் விற்பனைக்கு உண்டு. தொடர்புகளுக்கு: தங்க மாளிகை, ஈழநாதம் பணிமனை அருகாமை, யாழ்சாலை,கிளிநொச்சி. (3337)

### விற்பனைக்கு

புதிதாக வாங்கி சிறிதுகாலம் பாவிக்கப்பட்ட கறுப்பு, வெள்ளை T.V. அன்ரனா, வயர், பற்றரி 90, டைப் உடன் விற்பனைக்கு. பார்வையிடுபவர்கள் மதியம் 1 மணிக்கு வரவும். மது மருந்தகம், முருகன் கோவிலடி, கிளிநொச்சி. (3338)

### மார்க்கோணி இலத்திரனியல் பயிற்சி நிலையம்

வகுப்புக்கள் ஆரம்பமாகிறது. காலம்: 22.06.2003 ஞாயிறு காலை 9.00மணிக்கு இடம்:தொலைத் தொடர்புக்கு அருகாமை, 09ஆம் வட்டாரம்,புதுக்குடியிருப்பு வானொலிபழுது பார்த்தல், புதிதாகத்தயாரித்தல், வீட்டுமின் இணைப்பு, அன்ரனா பொருத்துதல் இவற்றிற்கான சான்றிதழ் இறுதியில் வழங்கப்படும். (3238)

## க.பொ.த.(சா/த) கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை

(அலுவலக செய்தியாளர்)

கிளிநொச்சி மாவட்டத்திலுள்ள பாடசாலைகளில் கல்வி பயிலும் 10ம், 11ம் ஆண்டு மாணவர்களின் சிறந்த பரீட்சைப் பெறுபேற்றினை பெற்றுக்கொடுக்கும் வகையில் மேற்படி மாணவர்களுக்கு கல்வி புகட்டும் ஆசிரியர்களுக்கான பயிற்சிப் பட்டறை நேற்று . கிளி.கனகபுரம் ம.வி.யில் முன்னாள் வட-கிழக்கு மாகாணக் கல்விப்பணிப்பாளரும், கிளி.மாவட்ட ஜி.ரி.எஸ் நிறுவனப் பணிப்பாளருமாகிய கந்தசாமி தலைமையில் நடைபெற்றது.

கிளி. மாவட்ட பாடசாலைகளைச் சேர்ந்த ஒவ்வொரு பாடவிதானங்கள் அதாவது தமிழ், கணிதம்,சமூகக்கல்வி, விஞ்ஞானம், ஆங்கிலம் ஆகிய பாடங்களைக் கற்பிக்கும் பாடசாலை ரீதியாக ஐந்து ஆசிரியர்கள் இப் பயிற்சிப்பட்டறையில் கலந்து கொண்டனர்.

2003, 2004ம் ஆண்டுகளில் க.பொ.த. (சா.த) பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களை சிறந்த பெறுபேற்றை பெறச்செய்யும் வகையில் அவர்களுக்கு கற்பித்தலை மேற்கொள்ளும் வகையில் இப்பயிற்சிப் பட்டறை இடம்பெற்றது.

இப்பயிற்சிப் பட்டறையில் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர்,கிளி.வலயபிரதிக் கல்விப் பணிப்பாளர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி பயிற்சிப் பட்டறை இன்றும் மேற்படி கனகபுரம் ம.வி. யில் நடை பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (சோ)

## துயர் பகிர்வோம்

எமது வித்தியாலய விஞ்ஞான பாட ஆசிரியை செல்வி கமலமணி இராசையா 19.06.2003 அன்று அகால மரணம் அடைந்துள்ளார். இம் மரணச் செய்தி கேட்டு நாம் ஆழ்ந்த துயரடைகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திப்பதோடு அன்னாரின் பிரிவுத் துயரில் மூழ்கி இருக்கும் குடும்பத்தினரோடு நாமும் பிரிவுத்துயரில் பங்கெடுத்துக் கொள்கின்றோம்.

**அதிபர், ஆசிரியர்கள்,**
**ஊழியர்கள், மாணவர்கள்,**
**பாடசாலை அபிவிருத்திச் சங்கம்,**
**மு/இரணைப்பாலை றோ.க.ம.வி.**

(3239)

## இறை தியான குணமாக்கல் வழிபாடுகள்

போட்டா, இந்தியா, இறை தியான இல்லத்திலிருந்து வந்திருக்கும் அருட்திரு சேவியர் அருள்ராஜ் அவர்களால் இவ்வழிபாடு நடாத்தப்படும்.

| காலம் | இடம் | நேரம் |
|---|---|---|
| 23.06.2003 | கிளி.புனித திரேசாள் ஆலயம் | மாலை 4.00 - 7.00 மணி |
| 24.06.2003 | புது. புனித சூசையப்பர் ஆலயம் | மாலை 4.00 - 7.00 மணி |
| 25.06.2003 | முழங். புனித வேளாங்கண்ணி ஆலயம் | மாலை 4.00 - 7.00 மணி. |

அருட்திரு A.P. தேவசகாயம்,
மறைக்கோட்ட குருமுதல்வர்.

(3341)

## பாடசாலை மாணவர்களுக்கான சீருடை வழங்கல்

அக்கராயன் ப.நோ.கூ.சங்கத்தின் ஊடாக, வழங்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான சீருடைகளை இதுவரை பெற்றுக்கொள்ளாத மாணவர்கள் கீழ்க்குறிப்பிடப்பட்ட விபரப்படி, உரிய இடங்களில் தவறாது பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

| பாடசாலை பெயர் | வழங்கும் திகதி | வழங்கும் இடம் |
|---|---|---|
| ● ஸ்கந்தபுரம் இல:01 அ.த.க.பாடசாலை | 23.06.2003 | கிளி/அக்கராயன் மகாவித்தியாலயம் |
| ● ஸ்கந்தபுரம் இல:02 அ.த.க.பாடசாலை | " " | " " |
| ● கண்ணகைபுரம் அ.த.க.பாடசாலை | " " | " " |
| ● அக்கராயன் மகா வித்தியாலயம் | " " | " " |
| ☐ வன்னேரிக்குளம் மகாவித்தியாலயம் | 24.06.2003 | கிளி/வன்னேரிக்குளம் ம.வி |
| ☐ ஐயனார்புரம் அ.த.க.பாடசாலை | " " | " " |
| ☐ ஆனைவிழுந்தான் அ.த.க.பாடசாலை | " " | " " |
| ☐ குஞ்சுக்குளம் கணேசா வித்தியாலயம் | " " | " " |
| & அக்கராயன் அ.த.க.பாடசாலை | 25.06.2003 | அக்கராயன் அ.த.க.பாடசாலை(கோணாவில்) |
| & யூனியன்குளம் அ.த.க.பாடசாலை | " " | " " |
| & ஊற்றுப்புலம் அ.த.க.பாடசாலை | " " | " " |

**தலைவர்/பொதுமுகாமையாளர்**
**அக்கராயன் ப.நோ.கூ.சங்கம்.**

(சி-8208)

## பூநகரி பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம் [வரையறுக்கப்பட்டது] 2003-கிளைக்குழுத் தேர்தல்

# அறிவித்தல்

வடக்கு-கிழக்கு மாகாணக் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளரும் (வடக்கு-கிழக்கு) அவர்களினால் அங்கிகரிக்கப்பட்டது. 1998.5.19 திகதிய 1028/6 இலக்கம் கொண்ட அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதுமான வடக்கு கிழக்கு மாகாண எல்லைக்குட்பட்ட பகுதியில் இயங்கிவரும் வரையறுக்கப்பட்ட பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் கீழ் வரும் கிளைகளுக்கான கிளைக்குழுத்தெரிவுக்கான கிளைப் பொதுச் சபைக் கூட்டங்கள் பின்வரும் கால அட்டவனையின்படி நடைபெறுவதற்காக ஒழுங்குகள் கூட்டுறவு அபிவிருத்தி உதவிஆணையாளர் கிளிநொச்சி அவர்களினால் மேற்கொள்ளப் பட்டுள்ளது.

**திகதி:- 28.06.2003 சனிக்கிழமை,நேரம் முற்பகல் 9.30 மணி**

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப்பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 19 | சாமிப்புலம் | கிளி/சாமிப்புலம் அ.த.க.பாடசாலை |
| 02 | 07 | மறவ குறிச்சி | கிளி/செல்விபுரம் அ.த.க.பாடசாலை |

**திகதி:- 29.06.2003 ஞாயிற்றுக்கிழமை, நேரம்:- முற்பகல் 9.30 மணி**

| தொ. இல | கிளை இல | கிளையின் பெயர் | கிளைப்பொதுச் சபைக்கூட்டம் நடைபெறும் இடங்கள் |
|---|---|---|---|
| 01. | 10 | கிராஞ்சி | கிளி/கிராஞ்சி அ.த.க.பாடசாலை |
| 02 | 11 | வேரவில் | கிளி/வேரவில் மகாவித்தியாலயம் |

முக்கிய குறிப்பு- 01] ஏற்கனவே அறிவித்ததன்படி கோரமின்மையால் தெரிவு நடைபெறாத காரணத்தினால் இச் சந்தர்ப்பம் வழங்கப்படுகின்றது. இன்னோர் சந்தர்ப்பம் வழங்கப்பட மாட்டாது.


02] இது சம்பந்தமான மேலதிக தகவல்களை கிளை நிலையங்களிலும், தலைமை அலுவலகத்திலும் பார்வையிடலாம்.

**பொதுச் செயலாளர்,**
**பூநகரி பல நோக்குக் கூ.சங்கம்**
**வாடியடி,பூநகரி.**

(சி-8177)



## புதூர் நாகதம்பிரான் பொங்கல் திருநாள் சிறப்புப் பேருந்துப் பணி



### தமிழீழப் போக்குவரவுக் கழகம்

**23.06.2003 ஆம் நாள் திங்கட்கிழமை புதூர் நாகதம்பிரான் கோவிலில் நடைபெறும் பொங்கல் திருநாளை முன்னிட்டு பின்வரும் வழித்தடங்களில் சிறப்புப் பேருந்துப்பணி நடைபெறும்.**

**புதுக்குடியிருப்பு பேருந்து நிலையம், முள்ளியவளை நகர், முல்லைத்தீவு நகர், நெடுங்கேணி நகர் மல்லாவி பேருந்து நிலையம், கிளிநொச்சி பேருந்து நிலையம், முழங்காவில் பேருந்து நிலையம், புளியங்குளம் பேருந்து நிலையம், பளைப் பேருந்து நிலையம் ஆகிய இடங்களிலிருந்து புறப்பட்டு புதூர் நாகதம்பிரான் கோவிலைச் சென்றடையும் என்பதனை பொதுமக்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகிறோம்.**

குறிப்பு:- புதுக்குடியிருப்பில் இருந்து விசுவமடு, பரந்தன் வழித்தடத்தின் ஊடாகவும், புதுக்குடியிருப்பு கற்சிலைமடு, ஒட்டுசுட்டான், மாங்குளம் வழித்தடத்தின் ஊடாகவும் பணி நடைபெறும்.

**முகாமையாளர்,**
**தமிழீழப் போக்குவரவுக் கழகம்,**
**பேருந்துப்பகுதி,**
**கிளிநொச்சி.**

(சி:-8176)

# பாக்.இற்கு நவீன போர் விமானங்களை அமெ. வழங்குவது கவலையளிக்கவில்லை

## இந்தியா அறிவிப்பிற்கு - அமெரிக்கா மறுப்பு

(புதுடில்லி)

**பாகிஸ்தானுக்கு நவீன போர் விமானங்களை அமெரிக்கா வழங்குவது பற்றி இந்தியா கவலைப்படவில்லை என்று இந்திய பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ் கூறியுள்ளார்.**

போர் விமானங்களை பாகிஸ்தான் வாங்கியிருப்பது இருநாடுகளுக்குமிடையே நடைபெறவுள்ள அமைதிப் பேச்சுவார்த்தைகளை எந்த விதத்திலும் பாதிக்காது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை F-16 ரக நவீன போர் ஜெட் விமானங்களை பாகிஸ்தானுக்கு அமெரிக்கா விற்பனை செய்ய இருப்பதாகக் கூறும் செய்திகள் தவறானவை என்று தெளிவுபடுத்தியுள்ளது.

இது பற்றி பென்டகன் செய்தி தொடர்பாளர் கமோண்டர் ராண்லி ஸ்ராண்டர் கூறுகையில் இது முற்றிலும் தவறான தகவல் என்று கூறியுள்ளார். பல ஆண்டுகளுக்கு முன்னர் விற்பனை முடிவாகிவிட்ட இப்போர் விமானங்கள் இஸ்லாமாபாத்தின் அணுவாயுதத் திட்டத்தையடுத்து பாகிஸ்தானுக்கு அனுப்பப்படவில்லை என்றும் அவர் கூறியுள்ளார்.



பாக்தாத்தில் காவலரண் ஒன்றில் கடமையிலிருக்கும் அமெரிக்கப் படைவீரர்

# அமெ. படைகளின் கீழ் இந். படைகளை ஈராக்கிற்கு அனுப்பமாட்டோம்

## - பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்னாண்டஸ்

(புதுடில்லி)

ஈராக்கில் அமைதியை ஏற்படுத்துவதற்காக அமெரிக்க கட்டுப்பாட்டின் கீழ் இந்தியப் படைகளை அனுப்பப் போவதில்லை என இந்தியப் பாதுகாப்பு அமைச்சர் ஜோர்ஜ் பெர்ணான்டஸ் தெரிவித்துள்ளார்.

ஈராக்கில் அமைதியை ஏற்படுத்த இந்திய இராணுவத்தை அனுப்ப வேண்டும் என அமெரிக்கா கோரியுள்ளது.

ஆனால் அமெரிக்க கட்டுப்பாட்டின் கீழ் இந்தியப்படைகளை அனுப்ப ஐ.நா. பொதுச் செயலர் கொபி அனான் மற்றும் இந்தியத் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் செய்தியாளர்களிடம் பேசிய பெர்னாண்டஸ் அமெரிக்க கட்டுப்பாட்டின்கீழ் இந்திய இராணுவத்தை அனுப்புவதில் பல சிக்கல்கள் இருப்பதாகக் கூறியுள்ளார்.

இது தொடர்பாக கேட்கப்பட்ட விளக்கங்களுக்கு அமெரிக்கா இதுவரை பதிலளிக்காமையினால் உடனடியாக ஈராக்கிற்கு இந்தியப் படைகள் அனுப்பப்படமாட்டாது என்றும் கூறியுள்ளார்.



போசாக்கின்மையால் பாதிக்கப்பட்ட சோமாலிய சிறுவன் வைத்தியசாலையில் சிகிச்சை பெறுகிறார்.

# பாகிஸ்தானின் மிரட்டலுக்கு எவரும் அஞ்சத் தேவையில்லை

## - இந். தயாராகவுள்ளதாக விமானப்படைத் தளபதி

கார்க்கில் போன்றதொரு மோதல் சூழ்நிலை மீண்டும் ஏற்படலாம் என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப்பின் அண்மைய மிரட்டல் காரணமாக எந்த வித அச்சமும் கொள்ளத் தேவையில்லை என இந்திய விமானப் படைத் தளபதி ஏ.சி. மார்ஷல் கிருஸ்ணசாமி கூறியுள்ளார்.

நேற்று முன்தினம் செய்தியாளர்களிடம் பேசிய இவர், நூறு கோடி மக்களைக் கொண்ட பெரிய நாட்டின் பாதுகாப்புத் துறை, அயல்நாட்டில் என்ன நடக்கின்றது என்பதை அறியாமல் இருக்க முடியாது என்று கூறியுள்ளார்.

அத்துடன் கார்க்கில் போருக்கு பின்னர் முப்படைப் பிரிவுகளின் ஒருங்கிணைப்பு மாற்றியமைக்கப்பட்டுள்ளது. மிகக் குறைந்த கால அவகாசத்தில் எந்தவொரு நடவடிக்கைக்கும் ஆயத்த நிலை பராமரிக்கப்படுகின்றது என்றும் அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, இந்தியாவுக்கு மேற்கிந்திய நாடுகள் ஆயுதங்களை வழங்குவதை கட்டுப்படுத்த வேண்டும் என்று பாகிஸ்தான் சனாதிபதி முஷாரப் கூறியுள்ளார்.

லண்டனில் பத்திரிகைக்கு அளித்த பேட்டியில், பாகிஸ்தானை விட இராணுவ ரீதியில் இந்தியாவின் கை ஓங்குவதற்கு அனுமதிக்கக் கூடாது என்று பிரிட்டனையும், அமெரிக்காவையும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

இல்லையெனில் பாகிஸ்தான் தனது அணுவாயுதத்தையே நம்பியிருக்க வேண்டும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

# அமெ. குற்றச்சாட்டுக்கள் பொய்யென நிரூபிக்குக

## - ஐ.நா.ஆயுத கண்காணிப்பாளர் ஈரானிடம் கோரிக்கை

(லண்டன்)

அணுவாயுதத்தைத் தயாரிக்கும் திட்டங்கள் எதனையும் கொண்டிருக்காது விட்டால் அமெரிக்கா தெரிவிக்கும் குற்றச்சாட்டுக்கள் பொய்யானவையென நிரூபிக்குமாறு சர்வதேச அணுவள நிறுவனம் ஈரானிடம் வலியுறுத்திக் கேட்டுக்கொண்டுள்ளது.

ஈரானிய அரசு அணுவாயுத உற்பத்தியை தடைசெய்யும் உடன்படிக்கைகளை அனுசரித்து நடக்கத் தவறிவிட்டதாக அவ்வமைப்பின் நிறைவேற்று குழு வலியுறுத்தியுள்ளது.

விரைவில் ஆயுத கண்காணிப்பாளர்களை ஏற்று வெளிப்படையாக நடந்துகொள்ளுமாறு ஈரானிய அரசு வலியுறுத்தப்பட்டுள்ளது.



எதியோப்பியாவில் அண்மையில் கண்டுபிடிக்கப்பட்ட 160 ஆயிரம் வருடங்கள் பழமை வாய்ந்த மனித மண்டையோடு

# அமெ. வாடகைக்கு வழங்கிய விமானம் அங்கோலாவில் கடத்தல்

(லண்டன்)

அங்கோலா விமான நிலையத்திலிருந்து கடத்தப்பட்ட போயிங் 727 விமானத்தை தீவிரவாதிகள் பயன்படுத்தக் கூடும் என அமெரிக்கா தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக கருத்து வெளியிட்டுள்ள வெள்ளை மாளிகைப் பேச்சாளர் ஒருவர் விமானக் கடத்தல் குறித்து ஒரு சில தகவல்களே தமக்குகிடைத்துள்ளதாகக் கூறியுள்ளார். கடத்தப்பட்ட இவ்விமானத்தைக் கண்டுபிடிக்க அமெரிக்கா முயன்று வருவதாகவும் அவர் கூறியுள்ளார். 14 மாதங்களாக அங்கோலா விமான நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த இவ்விமானம் கடந்த மே மாதம் 25ம் திகதி அவ் விமானநிலையத்திலிருந்து புறப்பட்டதாகவும் அவ் விமானத்தின் விமானியுடன் கட்டுப்பாட்டு அதிகாரிகள் தொடர்புகொள்ள முயன்றபோது விமானியிடமிருந்து எவ்வித பதிலும் கிடைக்க வில்லையெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அமெரிக்க விமானசேவைக்குச் சொந்தமான இவ்விமானம் குத்தகைக்கு விடப்பட்டதாகவும் தெரியவருகிறது.



ஈராக்கில் தேடுதல் நடத்தும் அமெரிக்கப் படையினர்

# பூமியின் எடையைக் கண்டுபிடித்தது எப்படி

பூமியின் எடையைக் கண்டு பிடிப்பதற்கு நியூட்டனின் பிரபஞ்ச புவியீர்ப்பு விதி பயன்படுகின்றது. **(Universal Law of Gravitation)**

பிரபஞ்சத்தில் எந்த இரு பொருட்களும் ஒன்றையொன்று கவரும் சக்தி, பொருட்களின் எடையைப் பொறுத்தது. அதாவது எடை அதிகரிக்க கவர்ச்சி அதிகரிக்கும். இரு பொருட்களுக்கும் இடையே உள்ள தூரம் குறையக் குறைய கவர்ச்சி அதிகரிக்கும்.

இதையொரு சமன்பாடாக $F=Gm1\ m2/d^2$ என்று குறிப்பிடும் போது F-கவர்ச்சியின் சக்தி, m1,m2- பொருட்களின் எடைகள், d- இடைத்தூரம்.

இதில் G என்பது ஒரு ஸ்திரமான எண் இந்த G தெரிந்தால் பூமியின் எடையைத் தெரிந்து கொண்டு விடலாம்.

எவ்வாறு எனில் மரத்திலிருந்து நாம் தடுக்கிவிழுகின்றோம் என்பது கூட இந்தப் பிரபஞ்ச விதியின் ஒரு பிரதான சம்பவம்தான்.

பூமியின் அபார எடை எம்மை கவர்ந்தமையே நாம் கீழே விழக்காரணமாகும். நாம் விழுவதால் எமது வேகம் மளமளவென்று அதிகரித்துக் கொண்டே போகும். இதனை வேக மாற்றம் என்று சொல்லலாம் எனவும் கூறப்படுகின்றது. **(Acceleration)**

பூமியில் ஏற்படும் இந்த வேகமாற்றத்தை G என்பார்கள். இதை துல்லியமாக அளவிடமுடியும். பிரபஞ்சப் பொது ஈர்ப்பு விதியிலிருந்து இந்த Gயின் மதிப்பு $Gm/R^2$ என்று நிரூபித்து விடலாம்.

இதில் m என்பது பூமியின் எடை R என்பது பூமியின் மையத்தின் ஆரம் **(Radius)** Gயைக் கண்டு பிடிக்கப் பல முறைகள் இருக்கின்றன. பூமியின் ஆரமும் தெரியும். ஆனால் பெரி G...? இதைக் கண்டு பிடிக்க என்னென்னமோ முயன்று பார்த்தார்கள்.

ஆண்டிஸ் மலைத் தொடருக்கு அருகில் ஒரு பெண்டுலம் தொங்க விட்டு அது மலையின் கவர்ச்சியால் எப்படிச் சாய்கின்றது என்று ஒரு விஞ்ஞானி பரிசோதனை செய்து பார்த்தார்.

மற்றொருவர் பெண்டுலத்தைத் தூக்கிக்கொண்டு சுரங்கத்துக்குள் இறங்கிப் பார்த்தார். விடைதான் கிடைக்கவில்லை.

பிரச்சினை மிக எளிதானதுதான். இரண்டு இரும்புக் குண்டுகளுக்கிடையே இருக்கும்

ஈர்ப்பு விசையை அளந்தால் போதும். இந்தப் பெரிய G கிடைத்து விடும் சிக்கல்கள் இதுதான்.

இந்த ஈர்ப்பு விசை மிகக் குறைவானது. மிகமிக இந்த நுண்ணிய விசையை அளப்பதற்கு அந்தக் காலத்தில் கருவிகள் இல்லை.

1777 இல் பிரெஞ்சு விஞ்ஞானி அகஸ்டின் கூலம்ப் என்பவர் "டார்ஷன் பாலன்ஸ்" எனும் நுட்பமான அளவு கருவியைக் கண்டு பிடித்தார்.


1978 இல் காவண்டிஷ் எனும் பிரிட்டிஷ்காரர் இந்த டார்ஷன் பாலன்ஸை உபயோகித்து ஈர்ப்பு விசை எண்ணைக் (G) கண்டு பிடித்தார்.

ஒரு தனிப்பட்ட அறையில் மெல்லிய கம்பியில் தொங்க விடப்பட்ட ஆறடி இரும்புத் தண்டின் இரு முனையிலும் இரண்டு ஈயக் குண்டுகளை அமைத்து, அவற்றின் அருகே சமதூரத்தில் ஒரு யோடி பெரிய துண்டுகளைத் தொங்கவிட்டு இரண்டுக்கும் ஏற்படும் ஈர்ப்பு விசையால் கம்பி முறுக்கிக் கொள்ளும் அளவைத் திரும்பத் திரும்ப அளந்து G யைக் கண்டு பிடித்து விட்டார்.

அதிலிருந்து பூமியின் எடையைக் கண்டறிவது சுலபமாயிற்று.

பூமியின் எடை $5.893\times10^{24}$ கே.ஜி. அதாவது 5.893 க்குப் பிறகு இருபத்து ஒரு சைபர்கள். அத்தனை கிலோக்கிராம்.

# கணினியில் பயன்படும் புதிய ஒலிபெருக்கி



கணினியில் பயன்படுத்தப்படும் ஒலிபெருக்கிகளை இந்தியாவில் உள்ள நிறுவனம் ஒன்று அறிமுகப்படுத்தியுள்ளது. 100 வாட்ஸ் மின் சாரத்தில் இயங்கக் கூடிய 5.1 ஒலிபெருக்கி செட் என்ற மொடல் அண்மையில் வந்துள்ளது.

பெரும்பாலும் கணினியில் பயன்படுத்தும் ஒலிபெருக்கிகளில் சார்ரவுண்டில் பழுது ஏற்பட்டு விடுகின்றது.


ஆனால் ஒலிபெருக்கிகளில் எவ்வித பழுதும் ஏற்படாது என்று கூறுகின்றது இந்நிறுவனம்.

டால்பி டிஜிட்டல், டால்பிப்ரோலாஜிக் ஆடியோ, சார்வுண்ட் போன்ற நவீன நுட்பங்களைக் கொண்டுள்ளது.

வீடுகளுக்கும் இதைப்பயன்படுத்தும் வகையில் வடிவமைப்பு வசதியும் கொண்டது. இதன் விலை 299 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# புதிய லேசர் பிறிண்டர்

புதிய லேசர் பிரிண்டர் ஒன்றை சாம்சுங் அறிமுகப்படுத்தியுள்ளது. இதற்கு "சாம்சுங் எம்.எல்-1750 லேசர் பிரிண்டர்" எனப் பெயரிடப் பட்டுள்ளது.



இதில் 1200 டிபிஐ (DPI) ரிசொலுசனில் பிரிண்ட் எடுக்க முடியும். நிமிடத்திற்கு 17 பக்கங்கள் பிரிண்ட் எடுக்கும் வேகத்தில் செயற்படக் கூடியது.

இந்தப் பிரிண்டரில் தாள் வைக்கக் கூடிய பகுதியான கேசட்டிரில் 250 தாள்கள் வரை வைக்கக் கூடிய வசதியுள்ளது. விண்டோஸ், மேக் ஆப்பரேட்டிங் சிஸ்டத்தில் இயங்கக் கூடியது. டோனர் பயன்பாட்டில் 40 சதவீதம் மிச்சப்படுத்தும் வகையிலான தொழில் நுட்பத்தைக் கையாண்டுள் ளது.

3x5 அங்குலம் முதல் பல்வேறு அளவுகளில் உள்ள தாள்களில் பிரிண்ட் எடுக்கலாம். இதன் விலை 299 அமெரிக்க டொலர்கள் என சாம்சுங் எலெக்ட்ரானிக்ஸ் (அமெரிக்க) செய்திக் குறிப்பு.

# செயற்கை விழித்திரை

விழித்திரை பழுதடைந்து பார்வை இழந்தவர்களுக்குப் பொருத்தக் கூடிய செயற்கை விழித்திரையை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

இந்த விழித்திரை கண்ணில் பொருத்தப்பட்டவுடன் அது பார்வைச் சமிக்ஞைகளைக் காட்சியாக மாற்றிப் பார்வை கிடைக்கச் செய்கின்றது.

இவ்வாறான செயற்கை விழித்திரை மூலம் பார்வை கிடைத்தால் மிகவும் துல்லியமாகத் தெரியாவிட்டாலும் பொருட்களின் தோற்றத்தை ஓரளவு ஊகிக்க முடியும்.

# உலகின் முதல் காந்த ரயில் சீனாவில்

காந்தப் புலத்தின் மேல் மிதந்தபடி பயணிக்கும் உலகின் முதல் ரயிலின் வெள்ளோட்டத்தை ஜேர்மனிஅதிபர் ஜெகர்ட்ஸ் கொரோடரும் சீனப்பிரதமர் ஜிரொன்ஙஜியும் 31-12-2002 இல் ஆரம்பித்து வைத்தனர். சீனாவின் சங்காய் நகருக்கும் அதன் விமான நிலையத்துக்குமிடையே இந்த நவீன ரயில், சேவையில் ஈடுபடும்.

காந்த சக்தி காரணமாகத் தண்டவாளத்தில் படாது மிதந்தபடி அதிவேகத்தில் செல்லக் கூடிய நவீனதொழில் நுட்பத்தை இந்த ரயில் கொண்டுள்ளது.

இத்தகைய ரயில் சேவை பொதுச் சேவையில் ஈடுபடுவது இதுவே முதற் தடவையாகும். இந்த ரயில் மணிக்கு 400 KM வேகத்தில் பயணிக்கும். அந்த வேகத்திலும் கூட ரயிலினுள் தண்ணீர் நிரம்பிய கோப்பையைத் தளம்பாமல் ஒருவர் வைத்திருக்க முடியும்.

இந்த ரயில்வேத் திட்டத்தைச் சீன அரசின் முதலீட்டைக் கொண்டு ஜேர்மனி நிறுவனமொன்று வடிவமைத்தது.

# நோய்க்கிருமிகளைக் கொல்லும் வெண் அணுக்கள்..............



மேலேயுள்ள படங்கள் நமது உடலில் ஓயாமல் நடைபெறும் மாற்றங்களைக் காட்டுகின்றன.

இரத்தத்தில் சிவப்பு அணுக்கள், வெண் அணுக்கள் என இரண்டு வகை குருதிக் கலங்கள் உள்ளன. வெண் அணுக்கள் அல்லது டி செல்கள் நமக்கு நோய்கள் ஏற்படாமல் பாதுகாக்கின்றன.

உடலுக்குள் நுழையும் கிருமிகள், வைரசுகள் மற்றும் அந்நியப் பொருட்களைத் தாக்கி அழிப்பது இவற்றின் வேலை.

நாம் ஆரோக்கியமாக இருப்பதற்கு இவைதான் காரணம். இவை அழிக்கப்பட்டு பலவீனம் அடைந்து போவதால்தான் நோய் ஏற்பட்டு மனிதன் மரணம் அடைகிறான்.

இங்கே குன்று போல காணப்படுவதுதான் டி செல் அல்லது வெண் அணு. மற்றையது நோய் உண்டாக்கும் பக்டீரியாக்கள். எப்படி பக்டீரியாக்களை வெண் அணு தன்னுள்ளே இழுத்தழிக்கின்றது என்பதை இப்படங்கள் காட்டுகின்றன.

# தெரிந்து கொள்ள

◆◆ 1965-பெப்ரவரி மாதம் 06 ஆம் திகதியன்று காமன் வெல்த் நாடுகளின் உறுப்பினர்களுக்காக புதிய பிரிட்டிஷ் தேசிய செய்தித்தாள் வெளியாகி இருந்த நாளன்று அச்சடிக்கப்பட்ட 50,000 பிரதிகளுடன் லண்டன் ஓட்டல் அறை ஒன்றில் ஓய்வாக இருந்தார். அப்பத்திரிகையைத் தொடக்கிய"லயோனல் பர்லெய்க்". அப்போது பொலிஸ் உள்ளே நுழைந்து இது என்ன களஞ்சிய அறையா.. களஞ்சியப்படுத்தி வைக்க.. என்று அத்தனை பிரதிகளையும் தூக்கி ஓட்டலுக்கு வெளியே வீசிவிட்டார்கள். இச்சம்பவத்திற்குப் பின்னர் காமன் வெல்த் செனட்டினல் எனும் பத்திரிகை வெளிவரவேயில்லை.

◆◆ உயிரினங்களில் கடல் வாழ் உயிரினமான "ஆக்டோபஸின்" என்பதின் இரத்தம் நீல நிறத்தில் இருக்கும்.

◆◆ ஒரு சராசரி மனிதன் தன் வாழ்நாளில் 30 தொன் உணவுப் பொருட்களையும் 50 ஆயிரம் லீற்றர் திரவங்களையும் அருந்துகின்றான்.

◆◆ இரண்டாம் உலகப் போரின் போது அமெரிக்க சனாதிபதியாக இருந்தவர் ரூஸ்வெல்ட். இவர் இளம்பிள்ளைவாதத்தால் தன் கால்களை இழந்தவர். சக்கர நாற்காலியில் இருந்தபடியேதான் தன் பதவியைத் திறம்பட வகித்தார்.

◆◆ உலகப் புகழ்பெற்ற மேனாலிஸா ஓவியத்தை வரைந்த ஓவியர் லியனாடோ டாவின்சி, லிஸாகொர்டினி எனும் அழகியைப் பார்த்தே இப்படத்தை வரைந்தார்.

◆◆ தென்கொரியா நாட்டில் எவருக்கும் சிவப்புநிற எழுதுகோலைப் பரிசாகக் கொடுக்கக் கூடாது. ஏனெனில் சிவப்பு வண்ணம் எதிரிகளைக் குறிக்கும்.

◆◆ ரஷ்யாவில் உள்ள ஒவ்வொரு சிற்றூரிலும் கட்டாயம் ஒரு நூலகம் உண்டு.


◆◆ இங்கிலாந்தில் முதலாம் அரசி எலிசபெத் காலத்தில் அரச குடும்பத்தினர். மட்டுமே வெல்வெட் ஆடைகளை அணியும் உரிமை பெற்றிருந்தனர்.

◆◆ சீல்-எனும் கடல்வாழ் உயிரினம் கருவுற்றிருக்கும் போது சாப்பிடுவதில்லை. தன் உடற் கொழுப்பையே கரைத்துத் தன்வயிற்றினுள் இருக்கும் குட்டிக்குச் செலுத்தும்.

◆◆ ஒட்டகச் சிவிங்கியின் பின் கால்கள்தான் அதனுடைய தற்காப்பு ஆகும். இது ஆபத்துக் காலத்தில் இந்தக் கால் மூலம் ஒரு உதைவிட்டால் அந்த உதை ஒரு சிங்கத்தைக் கூடக் கொல்லும் வலிமையுடையது.

# கையடக்கக் கணினி

பி.டி.ஏ. **(P.D.A.)** எனும் கையடக்கக் கணினியின் விலை குறைவதோடு அதிலுள்ள ஆப்சன்களும் அதிகரித்துள்ளன.



இப்படியொரு (பி.டி.ஏ.)ஐ ராயல் லீனியா நிறுவனம் அறிமுகப்படுத்தியுள்ளது. 16 எம்பி. நினைவகம் (16 **M. B. Memory**) கொண்டது.

40 மெகா ஹெர்ட்ஸ் சிபியு. 56கே. மோடம் இவற்றோடு பி.டி.ஏ. டெஸ்க் டாப் மென் பொருளும் கிடைக்கும்.

நாள்காட்டி, முகவரிப் புத்தகமும் உள்ளது. பாப் 3 இணைப்பிலுள்ள மின்னஞ்சல்களையும் பெற முடியும். அத்துடன் அனுப்பவும் முடியும். இதன் விலை 99 அமெரிக்க டொலர்கள் ஆகும்.

# "சாண்ட்லர் அசைவு"

புவியின் நில நடுக்கத்தையும் நில அதிர்வையும் எல்லோரும் அறிந்துகொண்டிருந்தாலும், புவி அசைகின்றது என்பதை தெரிந்துள்ளார்களா......

1.2 வருடங்களுக்கு ஒருமுறை புவி தனது வடதுருவ அச்சிலிருந்து 6கி.மீ.விலகிச் செல்வதாக அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டு பிடித்துள்ளார்கள்.

இதற்கு "சாண்ட்லர் அசைவு" என அழைக்கப் படுகின்றது.

வெப்பமாற்றம், உப்புத்தன்மை, நீரோட்டம், காற்றழுத்த மாற்றம் ஆகியவை உலகின் கடற்பரப்பில் மாறுபட்ட அழுத்தத்தை ஏற்படுத்துகின்றன. இந்த அழுத்தமே புவியின் அசைவுக்குக் காரணம்.

உலகப் புவிச்சுழற்சிச் சேவையினர் அளித்த தகவலின் படியே இதனை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டுபிடித்துள்ளனர்.

# கிளி.யில் சிறப்புற நடைபெற்ற சுற்றாடல் விழிப்புணர்வு ஆய்வரங்கம்

(அலுவலக செய்தியாளர்)
பொருண்மிய மதியுரையகத்தின் ஏற்பாட்டில் சுற்றாடல் விழிப்புணர்வு ஆய்வரங்கம் ஒன்று நேற்று முன்தினம் வட்டக்கச்சி பொருண்மிய மதியுரையக கேட்போர் கூடத்தில் நடைபெற்றுள்ளது.

இவ் ஆய்வரங்கில் சுற்றுச் சூழலை சுத்தம் செய்வதன் பயன்கள் தொடர்பாகவும், சுற்றாடல் மாசுறுவதற்கான காரணங்கள் தொடர்பாகவும், சுற்றாடல் மாசுறுவதால் மனித வாழ்விலும் இயல்பான சூழலிலும் எத்தகைய தாக்கங்கள் ஏற்படுகின்றன என்பன தொடர்பாகவும், இயற்கை உரப்பயன்பாடுகள், கிருமி நாசினப் பயன்பாடுகள் போன்றவற்றின் தாக்கங்கள் தொடர்பாகவும் ஆராயப்பட்டன.

அத்துடன் பொலித்தீன் பாவனை அதிகரிப்பால் சூழலில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள், அவற்றைத் தவிர்த்து சுற்றாடலை ஆரோக்கியமாக வைப்பது, மரங்களை அழிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள், நீர்வளத்தை பாதுகாத்தல் போன்ற பல்வேறு விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டுள்ளது.

மேற்படி நிகழ்வில் கண்டல்கள் தொடர்பான ஆய்வினை சூழலியல் ஆர்வலர் தொண்டமானாறு வெளிக்கள நிலையத்தைச் சேர்ந்த க.சி.குகதாசன் அவர்களும்,

நிலம் மாசடைதலால் ஏற்படும் பாதிப்புக்களும் அதனைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியமும் பற்றிய ஆய்வினை யாழ். பல்கலைக்கழக புவியியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் கலாநிதி இராஜேஸ்வரனும் நிகழ்த்தினர்.

கிளிநொச்சி மாவட்டத்தின் நீர்வளமும் அதனைத் திட்டமிட்டு பயன்படுத்தாமையால் நீர் மாசடைதல், நீர் பற்றாக்குறை ஏற்படுதல் தொடர்பான ஆய்வினை கிளிநொச்சி சுற்றாடல் அலுவலரும், காடுகளை அழிப்பதால் ஏற்படும் பாதிப்புக்கள் தொடர்பாக கிளிநொச்சி மாவட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர் அ.கேதீஸ்வரனும் நிகழ்த்தினர். திண்மக் கழிவுகளும் அதனுடன் சார்ந்த மாசடைதல்கள் தொடர்பாக உள்ளூராட்சி உதவியாளர் செல்வி கு.மணிமேகலை ஆய்வுகளை மேற்கொண்டார்.

மேற்படி நிகழ்வில் வரவேற்புரையை பொருண்மிய மதியுரையக இயக்குனர் கெங்காதரன் நிகழ்த்தினார். சிறப்புரைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் தூயவன், கரைச்சிப் பிரதேச செயலர் திரு.பொன்.நித்தியானந்தன் மற்றும் மகாதேவன் ஆகியோர் நிகழ்த்தினர்.

மேற்படி நிகழ்வில் தமிழீழ தேசியக்கொடியை வன வளப் பாதுகாப்புப்பிரிவு துணைப் பொறுப்பாளர் சுமன் ஏற்றிவைத்தார்.

இந்நிகழ்வுகளில் சூழலியல் ஆர்வலர்கள், பிரதேச செயலர்கள், சுற்றாடல் அலுவலர்கள் மற்றும் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்தவர்கள், பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் எனப் பல்துறை சார்ந்தவர்களும் கலந்து கொண்டனர்.

இவ் ஆய்வரங்கின் நிறைவில் கலந்து கொண்ட அனைவருக்கும் தேசிக்கன்றுகள் வழங்கப்பட்டன.

மேற்படி நிகழ்வுகள் யாவும் சுற்றாடல் உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது. (லோ)

## உலக தொ.நிறுவன உதவியுடன் பெண்கள் தொழிற்பயிற்சி அறிமுகம்

(அலுவலக செய்தியாளர்)
மட்டக்களப்பு மாவட்டத்தில் பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வுக் கழகத்தினால் இடை விலகிய மாணவர்களுக்கு தொழில்சார் பயிற்சி நெறி அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் இருந்து இடை விலகிய 14 -18 வயதுக்கு உட்பட்ட மாணவர்கள் 100 பேருக்கு தொழில் சார் பயிற்சிநெறிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இவைதவிர மேலும் 40 பேருக்கு கணனிக்கற்கை நெறி ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மேற்படி பயிற்சி நெறிகளுக்கு சுமார் இரண்டு மில்லியன் ரூபா நிதியுதவியினை (ஐ.எல்.ஓ) சர்வதேச தொழிலாளர் நிறுவனம் வழங்கியுள்ளது.

இதேபோல், பெண்கள் அபிவிருத்தி புனர்வாழ்வு நிறுவனத்தினால் ஐக்கிய நாடுகள் அபிவிருத் திட்ட நிதியுதவியுடன் உழைப்பாளர்களை இழந்த பெண்களுக்கு வருமான அதிகரிப்பை ஏற்படுத்தும் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

மேற்படித் திட்டம் ஐக்கியநாடுகள் அபிவிருத்தித்திட்டத்தின் நிதியுதவியுடன் கிளிநொச்சியில் 175 உழைப்பாளர்களை இழந்த விதவைகளுக்கு வருமானத் திட்டத்தினை அதிகரிக்கும் பொருட்டு புளியம்பொக்கணையில் உள்ள அப்பளத் தொழிற்சாலையை விஸ்தரித்து அதன் மூலம் தொழில்வாய்ப்பை ஏற்படுத்துதல், சுயதொழில் முயற்சியை ஊக்குவித்தல் போன்ற திட்டங்கள் இரண்டு மில்லியன் ரூபா நிதியொதுக்கீட்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (பா)

## சத்தியராஜ் மீதான தடுப்புக்காவல் நீடிப்பு

(மட்டக்களப்பு)
ராசிக்குழு தேசிய துணைப் படை உறுப்பினர் கதிர்காமத்தம்பி நவசூரியம் கொலை தொடர்பாகத் தடுத்து வைக்கப்பட்டுள்ள விடுதலைப்புலிகளின் திமிலதீவு அரசியல்துறைப் பொறுப்பாளர் சத்தியராஜின் தடுப்புக்காவல் அடுத்த மாதம் மூன்றாம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

நேற்று முன்தினம் மட்டக்களப்பு நீதவான் முன்னிலையில் சத்தியராஜ் முன்னிறுத்தப்பட்டார். அப்போது வழக்கு விசாரணை தொடர்ந்து இடம்பெற்று வருவதால் சத்தியராஜை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க வேண்டும் என்று மட்டக்களப்பு குற்றத்தடுப்புப்பிரிவு பொறுப்பதிகாரி விண்ணப்பித்தார். அதனை ஏற்றுக்கொண்ட நீதவான் மேற்படி உத்தரவினைப் பிறப்பித்துள்ளார்.

## தமிழீழ வனவளப் பாதுகாப்பு பிரிவின் மன்னார் மாவட்ட செயலகம் திறப்பு

(அலுவலக செய்தியாளர்)
16-06-2003 அன்று காலை திங்கட்கிழமை மு.ப. 10.00 மணிக்கு திறப்பு விழா நிகழ்வுகள் ஆரம்பமாகின. நிகழ்வுகள் யாவும் வனவள உத்தியோகத்தர் தலைமையில் இடம்பெற்றது. ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கினை மன்னார் பிரதேச காவல் பணிமனைப் பொறுப்பாளர் சசிகரன், போராளி தாடிஐயா ஏற்றி வைத்தார். தேசியக் கொடியினை கிளி. மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி ஏற்றிவைத்தார். அக வணக்கத்தை தொடர்ந்து பெயர்ப்பலகையை அதி வணக்கத்துக்குரிய அருட்தந்தை அன்ரன் திரை நீக்கம் செய்து வைத்தார். செயலகத்தினை வனவளப் பாதுகாப்புப் பிரிவு தமிழீழப் பொறுப்பாளர் சக்தி நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

தொடர்ந்து மண்டப நிகழ்வு நடைபெற்றன. வரவேற்புரையினை மரியதாசும் தலைமையுரையினை நிகழ்வின் தலைவர் திருநாவுக்கரசும் நிகழ்த்தினர். ஆசியுரையினை அருட்தந்தை அன்ரனும் வழங்கினார். சிறப்புரையினை மண்/அடம்பன் மத்திய மகாவித்தியாலய அதிபர் அருள்தாஸ், பெரும்பாக உத்தியோகத்தர் கோமதாஸ், கிளி அரசியல் துறைப் பொறுப்பாளர் முரளி ஆகியோர் நிகழ்த்தினர்.

இறுதியாக நன்றியுரையை வனவளப் பாதுகாப்பு பிரிவைச் சேர்ந்த சியாநந்தக்குமார் வழங்கினார். இந்நிகழ்வின் துறைசார் பொறுப்பாளர்கள், போராளிகள், அரச, அரசசார்பற்ற நிறுவன பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். (லோ)

## ரத்வத்தவின் பிணைமனு தீர்ப்பு வழங்கல் ஒத்திவைப்பு

(கொழும்பு)
உடத்தலவின்ன மனிதப்படுகொலை வழக்கில் 15 பிரதிவாதிகளின் பிணைக் கோரிக்கை தொடர்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பிணை மனுக்கள் மீது தீர்ப்பு வழங்குவதை உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் பிற்போட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை சமர்ப்பிக்கப்பட்ட இந்த பிணைமனுக்களை இந்த வழக்கை விசாரித்து வரும் விசேட மேல் நீதிமன்ற நீதிபதிகள் பெரும்பான்மை தீர்மானத்தால் நிராகரித்தமை குறிப்பிடத்தக்கது.

இந்தத் தீர்ப்பை பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான மூன்று நீதியரசர்கள் அடங்கிய உயர் நீதிமன்றம் நேற்று முன்தினம் ஆராய்ந்த பின்னரே தீர்ப்பு வழங்குவது பிற்போடப்பட்டது.

நேற்று முன்தினம் இவ்வழக்கு விசாரணைகள் எடுத்துக் கொள்ளப்பட்ட போது முகமட் சிபான் என்ற சாட்சி சாட்சியமளிக்கையில்; துப்பாக்கிச் சூட்டினால் காயமடைந்தவர்களின் பைகளில் குண்டுகள் வைக்கப் பட்டிருந்ததைக் கண்டதாகக் கூறினார். இதற்கு முன்னர் வானில் குண்டுகள் இருக்கவில்லை எனக் கூறினார்.

## - மட்டக்களப்பு மாவட்டத்தில் -
## 113 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம்

(கொழும்பு)
வட-கிழக்கு மாகாணத்தில் தமிழ்மொழி மூலம் நிரந்தர நியமனம் பெற்றுள்ள தொண்டர் ஆசிரியர்களில் மட்டக்களப்பு மாவட்டத்தில் 113 தொண்டர் ஆசிரியர்களுக்கு நிரந்தர நியமனம் கிடைத்துள்ளது.

இதில் மட்டக்களப்பு கல்வி வலையத்தில் 39 ஆசிரியர்களும், பட்டிருப்பு கல்வி வலையத்தில் 31 ஆசிரியர்களும், கல்குடா வலையத்தில் 43 ஆசிரியர்களும் நிரந்தர நியமனம் பெற்றுள்ளனர்.

## மேல்மாகாண உறுப்பினர் கொலை; ஐ.தே.க. அமைப்பாளர் கைது

(கொழும்பு)
மேல்மாகாண சபை உறுப்பினர் சுனில் மெண்டிஸ் கொலை செய்யப்பட்டது தொடர்பாக ஐ.தே.க. அமைப்பாளர் எட்வேட் சில்வா கைது செய்யப்பட்டுள்ளார்.

சுனில் மெண்டிஸ் கடந்த திங்களன்று அவரது வீட்டில் சுட்டுக் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

இச்சம்பவம் தொடர்பாக விசாரணை மேற்கொண்டுவரும் பொலிசாரே எட்வேட் சில்வா என்பவரைக் கைது செய்துள்ளனர்.

## கொழும்பில் நேற்று முன்தினம் மூன்று கொலைச் சம்பவங்கள்

(கொழும்பு)
கொழும்பு வடக்கு பொலிஸ் பிரதேசத்தில் நேற்று முன்தினம் மூன்று வெவ்வேறு கொலைச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

கூரிய ஆயுதங்களால் தாக்கப்பட்டே இக்கொலைகள் நடந்துள்ளதாகப் பொலிசார் தெரிவிக்கின்றனர். ஒரே குழுவினரே இக்கொலைகளையும் செய்ததற்கான ஆதாரங்கள் கிடைத்திருப்பதாகவும் சிறிலங்காப் பொலிசார் தெரிவித்துள்ளனர்.

## வன்முறையைத் தடுத்து நிறுத்த சனாதிபதி அதிகாரத்தைப் பயன்படுத்த வேண்டும்
### — ஜே. வி. பி. கோரிக்கை

தற்போது தலைதூக்கியுள்ள மோசடிகள் அரச வன்முறைகளை உடனடியாகத் தடுத்து நிறுத்த அரசியலமைப்பின்படி சனாதிபதி தமது முழு அதிகாரத்தையும் பிரயோகிக்க வேண்டும் என ஜே. விபி. அறிக்கை ஒன்றின் மூலம் கோரியுள்ளது.

அவ்வறிக்கையில் மேலும் தெரியவித்துள்ளதாவது, ஐ.தே. முன்னணி அரசு பதவியேற்றதில் இருந்து இன்றுவரை ஜே.வி.பி.யின் அரசியல் நடவடிக்கைகளை நசுக்கி வருகிறது.

2001ஆம் ஆண்டு மார்கழியில் பதவிக்கு வந்த ஐக்கிய தேசிய முன்னணி அரசு சுமார் 300 பேருக்கு மேலானவர்களை தாக்கி அங்கவீனர்களாக்கியுள்ளது. 66 பேரை பலிகொண்டுமுள்ளது.

பொ.ஐ.முன்னணியின் தென் மாகாண சபை அமைச்சரினதும் மேல் மாகாணசபை உறுப்பினர் சுனில் மெண்டிஸினதும் கொலைகளின் மூலம் இது தீவிரமடைந்துள்ளது. பொ.ஐ. முன்னணி அரசியல்வாதிகளை அடியோடு அழிப்பதே இவ்வரசின் நோக்கமாகும் என்பது இதன் மூலம் தெரிகிறது.

எனவே சனாதிபதி உடனடியாகத் தலையிட்டு தமது பலத்தை உபயோகித்து வன்முறைகளைத் தோல்வியுறச் செய்ய வேண்டும்.

## - இலங்கைக்குக்கடத்துவர இருந்த -
## 2 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் பிடிபட்டது
### - இராமேஸ்வர சுங்கப்பகுதி அறிவிப்பு

(கொழும்பு)
இராமேஸ்வரத்திலிருந்து இலங்கைக்கு படகுமூலம் கடத்த முயன்ற இரண்டு கோடிரூபா பெறுமதியுள்ள போதைப்பொருட்களை இந்திய சுங்கப்பிரிவினர் கடந்த புதன்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட படகிலிருந்த மூன்று பேர் காட்டுக்குள் ஓடித் தப்பிச்சென்றுள்ளதாகவும் சுங்கப் பிரிவினர் கூறியுள்ளனர்.

## ——பொறிவெடியில் சிக்கி——
## தம்பலகாமத்தில் ஒருவர் மரணம்

(திருகோணமலை)
திருமலை- தம்பலகாமம் கல் மாற்றியான்குளம் காட்டுப் பகுதியில் வேட்டைக்குச் சென்ற ஒருவர் பொறிவெடியில் சிக்கி உயிரிழந்துள்ளதாக கொழும்புச் செய்தி தெரிவிக்கின்றது.

அப்பரட்ணம் என்பவரே உயிரிழந்துள்ளதாகவும் அச்செய்தி தெரிவித்துள்ளது.

## வடமராட்சிப் பகுதியில் புதிய முகாம்கள் அமைப்பு

(யாழ்ப்பாணம்)
வடமராட்சிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் நேற்று முன்தினம் புதிய முகாம்களையும் சோதனைச் சாவடிகளையும் அமைக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்ததாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவிக்கின்றன.

அம்பன், குடத்தனை, மணற்காடு ஆகிய பகுதிகளிலேயே இம்முகாம் அமைக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

யாழ். நகரப்பகுதியில் மூன்றாம் குறுக்குத் தெருவில் சோதனைச் சாவடி ஒன்று அமைக்கப்படுவதாகவும் முள்ளுக் கம்பிகள் போன்ற பொருட்கள் கொண்டுவரப்பட்டு மக்கள் குடியிருப்புப் பகுதிகளில் புதிய காவலரண்கள் அமைக்கப்படுவதாகவும் அச்செய்திகள் தெரிவிக்கின்றன.

# தமிழர்களின் பலமும் பாதுகாப்பும் புலிகளே

# மட்டு.மாவட்ட மக்கள் பெருமன்றம் அறிக்கை

**விடுதலைப்புலிகள் பலமாக இருந்ததனாலேயே பேச்சுவார்த்தைக்கு அரசு இறங்கிவந்தது. விடுதலைப்புலிகளின் பலம் இழக்கப்பட்டால், தமிழர்களுக்கு விமோசனமே இல்லை. என மட்டக்களப்பு மாவட்ட மக்கள் பெருமன்றம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.**

முல்லைத்தீவு சம்பவமே இறுதிச் சம்பவமாக இருக் கட்டும். யுத்தம் மூலமே தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியுமென அரசாங்கம் உண்மையிலேயே நினைக்குமானால் விடுதலைப் புலிகள் மீண்டும் யுத்தத்தில் ஈடுபட்டுத் தமதுபலத்தையும், தமிழர் பலத்தையும் உலகறியச் செய்ய வேண்டும்.

எமது தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அத்தகைய முடிவை எடுப்பாரானால், எமது மக்கள் தமது முழு ஆதரவையும் தரத்தயாராகவே உள்ளனர்,

விடுதலைப்புலிகளுக்கும் அரசிற்கும் இடையிலான போர் நிறுத்த உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்டு 16 மாதங்கள் கடந்து விட்டநிலையில், தமிழ் மக்களுக்கும், தமிழ் மக்களின் காவலர்களான விடுதலைப் புலிகளுக்கும்,எதிரான கெடுபிடிப்போக்கினை அரசும்,அரசபடைகளும் தொடர்ந்து கடைப்பிடித்து வருகின்றன.

இதன் உச்சக்கட்டமாக, கடந்த சனிக்கிழமை முல்லைத்தீவுக்கு அப்பால், சர்வதேசக் கடற்பரப்பில் வைத்து விடுதலைப்புலிகளின் எண்ணெய்க்கப்பல் ஒன்று இலங்கை கடற்படையினரால் தாக்கியழிக்கப்பட்டதுடன், அதில் பயணம் செய்த போராளிகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வன்மையாகக் கண்டிக்கப்பட வேண்டிய இச்சம்பவம், அப்பட்டமான போர் நிறுத்த மீறலாகும். இதற்குக் காரணமானவர்கள் யார் என்பதைக் கூட அறிய முடியாத நிலையில் அரசு திணறுவதைக்காண முடிகின்றது.

தமிழர்களின் பலமும், பாதுகாப்பும் விடுதலைப்புலிகள் மட்டுமே. விடுதலைப்புலிகள் பலமாக இருந்த வேளையிலேயே போர்நிறுத்தத்தை மேற்கொண்டு சமாதானப் பேச்சுக்களுக்கு வந்தனர்.

யுத்தச் சூழலில் தமிழ் மக்கள் அனுபவித்த துன்பதுயரங்களைக் கருத்திற் கொண்டே விடுதலைப் புலிகள் இந்த முடிவுகளை எடுத்தனர்.

ஆனால், போர் நிறுத்தத்தின் பின்னர் பொதுமக்கள் கொல்லப்பட்ட போதிலும்,போராளிகளை இழக்க வேண்டி வந்த போதிலும் புலிகள் தொடர்ந்து பொறுமை காத்து வந்தனர்.

ஆனால்,விடுதலைப்புலிகளின் பொறுமையைச் சோதிக்கும் நடவடிக்கைகளும் அவர்களின் பலத்தைக் குறைக்கும் நடவடிக்கைகளும் தொடர்கின்றன.

பிரித்தாளும் தந்திரத்தைப் பாவித்து தமது நோக்கங்களை நிறை வேற்றலாமென அரசோ, ஏனைய சக்திகளோ நினைத்தால், அதற்கு விடுதலைப் புலிகள் என்றுமே அனுமதிக்கக் கூடாது என்பதே தமிழ் மக்களின் ஏகோபித்த வேண்டுகோள்.

எனவே, தமிழ் மக்களுக்கும் தமிழ் மக்களின் காவலர்களுக்கும் எதிரான நடவடிக்கைகளை அரசு உடன் நிறுத்திக்கொள்ள வேண்டுமெனக் கேட்டுக் கொள்கின்றோம் என இந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

## கலந்துரையாடல்

முல்லை வலயத்திற்குட்பட்ட தொண்டராசிரியர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று இன்று முற்பகல் 11.00 மணிக்கு மு. கொக்குளாய் அ.த.க.பாடசாலையில் நடைபெறவுள்ளதால் அனைத்துத் தொண்டராசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு தொண்டராசிரியர் ஒன்றியத்தினர் கேட்டுக் கொள்கின்றனர். (20)

# பதனிடப்படாத கறியுப்பை பயன்படுத்த வேண்டாம்

மனிதப் பாவனைக்கு ஊறு விளைவிக்கக் கூடிய குன்றுகளிலும் குழிகளிலும் உற்பத்தியாகும் உப்பு தற்போது எமது பகுதிகளில் பல பாகங்களிலும் விற்பனை செய்யப்பட்டு வருகின்றது. இக்கறியுப்பு உரிய முறையில் பதனிடப்படுவதில்லை. இதனால் மனிதனுக்கு அத்தியாவசியமான அயடீன் சேர்க்கப்படாமையுடன் ஏனைய அளவுக்கதிகமான மனித உடல்நலத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடிய மூலக்கூறுகள் அகற்றப்படுவதற்கு கறியுப்பு இருப்பிடப்படுவதும் (களஞ்சியப்படுத்தப்படுவதும்)இல்லை. எனவே உப்பு உற்பத்தி நிறுவனங்களால் உற்பத்தி செய்யப்படும் உப்புக்கள் தவிர்ந்த ஏனைய குன்றுகள், குழிகளில் எடுக்கப்படும் பதனிடப்படாத உப்புக்களை உணவுத் தேவைக்குப் பயன்படுத்துவதைத் தவிர்க்குமாறு தமிழீழ சுகாதாரப் பகுதியினர் கேட்டுள்ளனர்.

*அமெரிக்க கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தலைமையகத்தில்*

# அமெ-சிறி. தளபதிகள் சந்தித்துப் பேச்சு உதவிகள் குறித்தும் கருத்துப் பரிமாற்றம்

(கொழும்பு)

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் தயாசந்தகிரியும், அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் தேவிந்த சுபசிங்கவும்-அமெரிக்கக் கடற்படையின் பசுபிக் பிராந்திய கட்டளைத் தலைமையகத்திற்கு விஜயம் செய்துள்ளனர்.

கடந்த 11ஆம் திகதி முதல் 14 ஆம் திகதிவரை இவர்கள் இந்தவிஜயத்தை மேற்கொண்டிருந்தனர்.

இந்த விடயத்தில்-அமெரிக்காவில் இலங்கையின் பாதுகாப்பு விவகாரங்களுக்குப் பொறுப்பான அதிகாரியாகப் பணியாற்றும் பிரிகேடியர் றொகான் ஜெயசிங்க, கடற்படை கப்டன் கிரந்தஉடவத்த ஆகியோரும் இலங்கைக் குழுவில் இடம்பெற் றிருந்தனர்.

இவர்கள்- அமெரிக்கக் கடற்படையின் பசுபிக்பிரிவுப் பிராந்திய கட்டளை அதிகாரி அட்மிரல் தோமஸ் டீ பார்கோ, அமெரிக்க இராணுவத்தின் பசுபிக் பிரிவுத் தளபதி ஜெனரல் கிளைக் கெல்டன் ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுநடத்தினர்.

இதன்போது , அமெரிக்கா-இலங்கைப் படையினருக்கு, வழங்கி வரும் "பலன்ஸ் ஸ்ரைல்" பயிற்சி நடவடிக்கைகளைத் தொடர்வதென்று உறுதியளிக்கப்பட்டது.

அத்துடன், அமெரிக்கக் கடற்படை- இலங்கைக்கடற்படைக்கு தன்னாலியன்ற சகல உதவிகளையும் வழங்கும் என்றும் அமெரிக்க அதிகாரிகள் உறுதியளித்தனர்.

பாதுகாப்புக் கற்கைகளுக்கான ஆசிய பசுபிக் நிலையத்தில் வருடாந்தம் இலங்கையின் இருபது இராணுவக் கடற்படை அதிகாரிகளுக்கு -அமெரிக்கா பயிற்சியளித்து வருவதும் குறிப்பிடத்தக்கது.

# காரை நகரிலிருந்து மரம் எடுத்துவர சூழல் பாதுகாப்புப் பிரிவு தடைவிதிப்பு

(யாழ்ப்பாணம்)

காரைநகரிற்கு வெளியே மரங்களை எடுத்துச் செல்வதற்கு சூழல் பாதுகாப்புப் பிரிவு தடை விதித்துள்ளது.

அண்மைக்காலமாக இப்பகுதியில் மக்கள் நடமாட்டம் இல்லாமல் இராணுவக் கட்டுப்பாட்டினுள் இருப்பதால் இப்பகுதியில் சட்ட விரோதமாகவும், திருட்டுத்தனமாகவும் மரங்களை வெட்டிவெளியே எடுத்துச்செல்லும் சம்பவம் தொடர்சியாக நடைபெறுகிறது. இதனால் இப்பிரிவு தடைவிதித்துள்ளது.

அத்தியாவசியத் தேவைகளுக்காக மரங்களை அப்பகுதியிலிருந்து வெளியே எடுத்துச் செல்வோர் சூழல் பாதுகாப்புப் பிரிவினரிடமும் அப்பகுதி கிராமசேவையாளரிடமும் அனுமதி பெற்று எடுத்துச் செல்ல வேண்டுமென அறிவிக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு தவறுபவர்கள் மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (33)

# உலக சூழல் பாதுகாப்பு தினத்தை முன்னிட்டு சிரமதானமும் மரக்கன்றுகள் வழங்கலும்

உலக சூழல் பாதுகாப்புத் தினத்தை முன்னிட்டு கடற்புலிகளின் பிரதேசத்திற்குட்பட்ட பகுதியான முல்லைத்தீவு நகரப்பகுதியில் உள்ளூராட்சி உதவி ஆணையாளர், கரைதுறைப்பற்று பிரதேசசபையினரின் ஏற்பாட்டில், சிரமதானம் நடைபெற்றது.

இதில் உதவி அரசாங்க அதிபருக்கான புதிய கட்டடம் அமைக்கும் இடம், கடற்கரையில் மக்கள் ஓய்வாக இருக்கும் இடம் ஆகியன துப்புரவு செய்யப்பட்டன.

இந்த நிகழ்வில் சூழல் துப்புரவு தொடர்பாக முல்லை மகா வித்தியாலய அதிபர் ம.அன்ரனி ஜெயதாஸ், முல்லைத்தீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர் சி. சிவசுப்பிரமணியம் உள்ளூராட்சி உதவிஆணையாளர் ந.இராசையா ஆகியோர் உரை நிகழ்த்தினார்கள்.

முல்லை நகர புனரமைப்புக் குழுவினர், வர்த்தக சங்கத்தினர், முல்லைத்தீவு மகாவித்தியாலய அதிபர், மாணவர்கள், ஆசிரியர்கள், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பணிமனைப் பணியாளர்கள், பிரதேசசபை செயலாளர்,பணியாளர்கள், பொதுசுகாதார பரிசோதகர், கடற்புலிகளின் அரசியல் துறையினர் ஆகியோர் கலந்து கொண்டு உற்சாகத்துடன் சிரமதானப்பணியில் ஈடுபட்டனர். இறுதியாகப் பழமரக்கன்றுகளை கடற்புலிகளின் முல்லைமாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் மாரங்கன் வழங்கினார். இப்பயன்தரு பழமரக்கன்று களை கடற்புலிகளின் முல்லைப்பிரதேச பொறுப்பாளர் அரவிந்தன், முல்லை நகரப் புனரமைப்புக் குழுத்தலைவர் அ.மரியராசா, வர்த்தகசங்கத் தலைவர் செ.உதய குமார், உள்ளூராட்சி உதவி ஆணையாளர், இராசையா, பிரதேசசபைத் செயலாளர் திருமதி நேசரட்ணம் -சுசிர்தா,முல்லைத்தீவு பொதுச்சுகாதாரப் பரிசோதகர்கள் சி.சிவசுப்பிரமணியம் ஆகியோர் வழங்க பழமரக்கன்றுகளை மாணவர்கள், வர்த்தகர்கள், பிரதேசசபைப் பணியாளர்கள்,முல்லை நகரப்புனரமைப்புக்குழுவினர் ஆகியோர் பெற்றுக் கொண்டனர். இறுதியாக நன்றியுரையினை பிரதேசசபைச செயலாளர் நிகழ்த்தினார். (20)

# வன்முறைச் சம்பவங்களைக் கண்டித்து ஐ.தே.முன்னணி,ஜே.வி.பி.ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

மேல்மாகாண சபை பொ.ஐ. முன்னணியினதும். ஜே.வி.பி ஆதரவாளர்களினதும் கூட்டு ஆர்ப்பாட்டப் பேரணி ஒன்று பாராளுமன்றத்துக்கு அண்மையில் கடந்த 17ம் திகதி மாலை நடைபெற்றுள்ளது.

பல கோஷங்களையும் அரச எதிர்ப்பு சுலோகங்களையும் ஏந்தி சுமார் ஒரு மணித்தியாலமாக ஆர்ப்பாட்டம் நடைபெற்றுள்ளது. ஆர்ப்பாட்டத் தின்போது பின்வரும் எதிர்ப்பு கோஷங்கள் எழுப்பப்பட்டுள்ளன.

" நேற்று ரஞ்சித், இன்று சுனில் நாளை?"

"கொலையாளிகள் சுனில் மெண்டிஸைக்கொன்றுவிட்டார்கள்"

"ஐ.தே.முன்னணி அரசின் ஊழலை அம்பலப்படுத்தியதற்குத் தண்டனை கொலையா...?"

"சனாதிபதியே ஐ.தே.க அரசின் அரசியல் பயங்கரவாதத்துக்கெதிராக நடவடிக்கை எடு"

இவ்வார்ப்பாட்டத்தினால் அப்பகுதியில போக்குவரத்துக்கள் பாதிப்படைந்தன. பின்னர் பொலீசார் நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர்.

ஆர்ப்பாட்டத்தின் பின்னர் உரையாற்றிய எதிர்க்கட்சித்தலைவர் மகிந்த ராஜபக்ஷ,

தென்பகுதியில் ரஞ்சித்தின் சூடுதணியுமுன்பு மேல்மாகாண சபை யால் எமது மதிப்பிற்குரிய உறுப்பினர் சுனில் மெண்டிஸ்கொலை செய்யப்பட்டுள்ளார். ரஞ்சித் கொல்லப்பட்டது உயர் பாதுகாப்புப் பிரதேசத்தில். அதுபோலவே மெண்டிஸ் கொலை செய்யப்பட்டிருப்பதும் பொலிஸ்மா அதிபரின் வாசஸ்தலம் இருக்கும் பகுதியிலேயே. ரஞ்சித்தின் கொலையைக் கண்டித்து அன்று ஆர்ப்பாட்டத்தில் முன்னணி வகித்த சுனில் மெண்டிஸ் இன்று கொல்லப்பட்டார் எனக் கூறினார்.

மேல்மாகாண சபை முதலமைச்சர் றெஜினோல்ட்கூரே உரையாற்றும் போது "இக்கொலைகள் தற்செயலாக நடந்தவையல்ல. திட்டமிட்ட தொடர் கொலையின் ஆரம்பமே. நேர்மையாக வெற்றிகொள்ள முடியாத நிலையில் உள்ள இவ்வரசு இரத்தப் பலியூடாக வெற்றிகாண முயல்கிறது" என்றார். எனினும் இதனை நீடிக்க இடமளிக்க முடியாது அதனைத் தடுத்து நிறுத்தக்காலம் வந்துவிட்டது. வத்தளைப் பகுதியில் பாலம் அமைத்தலில் ஏற்பட்ட மோசடிகளைப் பாராளுமன்றில் ஆவணங்களுடன் நிருபிக்க நினைத்திருந்த சுனில் மெண்டிஸ் இவ்வாறு கொல்லப்பட்டார் எனவும் கூரே தெரிவித்துள்ளார்.

# வெள்ளம் மண்சரிவினால் ஏற்பட்டுள்ள சேதம்; புனரமைக்க 2700 கோடி ரூபா தேவை

(கொழும்பு)

வெள்ளத்தினாலும் மண்சரிவினாலும் பாதிக்கப்பட்ட பிரதேசங்களைப் புனரமைக்கும் பணி நாளை சனிக்கிழமை அரசாங்கத்தினால் ஆரம்பித்து வைக்கப்படுகிறது.

புனரமைப்பு வேலைகளுக்கு மொத்தம் 2700 கோடி ரூபாய் செலவாகும் என மதிப்பிடப்பட்டுள்ளது. பாதிக்கப்பட்ட ஆறு மாவட்டங்களில் வீடுகளையும், காணிகளையும் இழந்தவர்களுக்கென 1113 ஹெக்டேயர் காணி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது.

முற்றாகச் சேதமடைந்த வீடொன்றைத் திருத்துவதற்கு ஒரு இலட்சம் ரூபாய் வழங்கப்படும். சேதமடைந்த வீடுகளுக்கென தலா 40 ஆயிரம் ரூபா வழங்க அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்துள்ளது.

வெள்ளத்தினாலும் மண்சரிவுகளினாலும் முற்றாகச் சேதமடைந்த வீடுகளின் எண்ணிக்கை 9,294 ஆகும். மேலும் 30, 266 வீடுகளுக்கு ஓரளவு சேதம் ஏற்பட்டுள்ளது. 154 பாடசாலைகள் சேதமடைந்துள்ளன. இவற்றைப் புனரமைக்க 25 கோடி 80 இலட்சம் ரூபாயை வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. விவசாயத்துறையில் ஏற்பட்ட சேதத்திற்கு நட்டஈடு வழங்கவும் அரசு முடிவு செய்துள்ளது.

# விகாரையில் கொள்ளையிட முயன்ற குழுவினர் கைது

(கொழும்பு)

ஊனமுற்ற படையினர் தலைமையிலான குழுவினர் விகாரையில் கொள்ளையிட முயன்ற போது பிடிபட்ட சம்பவம் ஒன்று நுவரெலியா பகுதியில் அமைந்துள்ள புராதன விகாரை ஒன்றில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ளது.

ஊனமுற்ற படையினர் தலைமையிலான இக்கொள்ளைக் கும்பலில் நாகுல இராணுவ முகாமைச் சேர்ந்த மூன்று சிப்பாய்களும் வேறு இருவரும் இணைந்து செயற்பட்டு வந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி கும்பல் புராதன பொக்கிஷங்களை அங்கிருந்த பிக்குகளைத் தாக்கிவிட்டு கொள்ளையிட முயன்றதாகத் தெரிவிக்கப்படுகிறது.



## சிந்தனைக்கு

சுதந்திரம் என்பது பேரம்பேசிப் பெற்றுக்கொள்ளும் ஒரு வியாபாரப் பண்டமல்ல. அது இரத்தம் சிந்தி வெற்றி கொள்ளப்படும் ஒரு புனிதமான உரிமை.

தமிழீழத்தேசியத் தலைவர்.

ஈழநாதம்
EELANATHAM மக்கள் நாளிதழ்
யாழ். சாலை, கிளிநொச்சி. 21-06-2003

## பந்தெறிதல்!

நாட்டு மக்களுக்கு நேற்று முன்தினம் உரையாற்றிய சிறிலங்காப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாக சபை குறித்து விடுதலைப்புலிகளுடன் பேச அரசாங்கம் தயாராகவுள்ளது எனத் தெரிவித்துள்ளதோடு, "சமாதானப் பேச்சுவார்த்தைகளை மீண்டும் ஆரம்பிக்க வேண்டிய பொறுப்பு விடுதலைப்புலிகளைச் சார்ந்திருக்கின்றது" எனவும் குறிப்பிட்டுள்ளார். இப்பேச்சின் தொனியானது விடுதலைப்புலிகள் பக்கமே இனி அனைத்தும் உள்ளது. அதாவது பந்துள்ளது என்பதுபோன்றதாக இருந்தது.

பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் இத்தொனியானது அரசாங்கம் சமாதான முயற்சிகளில் காணப்படக் கூடிய முன்னேற்றத்தினைவிட, பந்தெறிதலில் அக்கறை கொண்டிருப்பதையே வெளிப்படுத்துவதாய் உள்ளது. ஏனெனில், மேற்கூறப்பட்ட இரண்டு விடயங்களும் விடுதலைப்புலிகளிடம் கூறுவதற்கு எந்தவித பொருத்தப்பாடும் அற்றவையாகும். விடுதலைப்புலிகள் இவை குறித்து ஏற்கனவே தெளிவான பதிலை சிறிலங்கா அரசாங்கத்திற்கும், சர்வதேச சமூகத்திற்கும் தெளிவுபடுத்திவிட்டனர்.

இடைக்கால நிர்வாகம் குறித்து ஏற்கனவே பேச வேண்டியவை யாவும் பேசப்பட்டுவிட்டன. இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புக் குறித்து அரசாங்கம் திட்டவரைபு ஒன்றை முன்வைத்தால் மட்டுமே பேச்சுவார்த்தைகளை ஆரம்பிக்க முடியும் என விடுதலைப்புலிகள் இயக்கம் ஏற்கனவே அறிவித்திருந் தது. அதுமாத்திரமல்ல, இடைக்கால நிர்வாகக் கட்டமைப் பானது விடுதலைப்புலிகளின் பரந்துபட்ட பங்கேற்புடன் கூடியதான அரசியல் - நிர்வாக அதிகாரங்களைக் கொண்டதாக இருத்தல் வேண்டும் என்பதையும் விடுதலைப் புலிகள் வெளியிட்டிருந்தனர்.

ஆகையினால், இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு ஒன்றை உருவாக்குவது குறித்து பேச்சுக்கள் நடத்துவதற்கு இனி எதுவும் இல்லை. நிர்வாகக் கட்டமைப்பின் வரைபு ஒன்றை அரசாங்கம் முன்வைத்தால் அது தொடர்பாகப் பேச்சுக்களை நடத்தலாம் என்பதே புலிகளின் நிலைப்பாடு. இதனை விடுதலைப்புலிகள் தற்பொழுது கூறவில்லை. டோக்கியோ மாநாட்டிற்கு முன்னதாகவே பகிரங்கமாகவே தெரிவித்திருந்தனர்.

ஆனால், ரணில் விக்கிரமசிங்க அரசாங்கம் டோக்கியோ மாநாட்டிற்கு முன்பாக இடைக்கால நிர்வாகம்/இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பு என்பவற்றையே உச்சரிக்கத் தயக்கம் காட்டியது. டோக்கியோ மாநாட்டில் அச்சொல்லை உச்சரிக்கப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க மனத்துணிவு பெற்றார் என்றாலும், அரசியல் யாப்பிற்கு உட்பட்டதான, விடுதலைப் புலிகளின் பங்கேற்பு குறித்து திட்டவட்டமான வரையறைகள் எதுவுமற்ற ஒரு திட்டத்தையே முன்வைத்தார். சுருக்கமாகக் கூறினால் டோக்கியோ மாநாட்டிற்கு முன்னர் விடுதலைப் புலிகள் நிராகரிக்கப்பட்ட திட்டத்தையே புதிய பெயரில் முன வைத்தார். இதனையும் உடனேயே விடுதலைப்புலிகள் நிராகரித்து விட்டனர்.

அதாவது, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சொல்லளவில் காட்டும் வேறுபாட்டை வைத்துப் பேச்சுவார்த்தைகளை ஆரம் பிப்பதென்பது சாத்தியமற்றதொன்று என்பது புலிகளின் நிலைப்பாடாகும். அதேசமயம் பிரதமர் ரணில் விக்கிரம சிங்கவோ அன்றி சிறிலங்காவிற்கு உதவி வழங்குபவர்கள் பெரும் தொகை நிதி வழங்குவதாக உறுதி அளித்துள்ளமை யினாலோ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தைகளை ஆரம் பிக்க வேண்டும் என்றோ அதன் பொறுப்பு விடுதலைப் புலிகளிடம் உள்ளது என்றோ கொள்வதற்கும் இல்லை.

டோக்கியோ மாநாட்டிற்கு முன்பாகவே எந்தகைய இடைக்கால நிர்வாகக் கட்டமைப்புத் தேவை, அதன் வரைபைத் தரும் பட்சத்திலேயே பேச்சுவார்த்தைகள் ஆரம்பிக்கப்படும் என விடுதலைப்புலிகள் தெரிவித்திருந்தமையினால், சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்து உதவி வழங்கியோருக்கு வாக்குறுதி களை அளித்த அரசாங்கமே சமாதான முயற்சிகளை முன்னெடுக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளுதல் வேண்டும். அதேபோன்று சிறிலங்காவின் வாக்குறுதிகளை ஏற்று சிறிலங்காவிற்கு நிதி உதவி அளிக்க முன்வந்த நாடுகள் வாக்குறுதிகளை நிறைவேற்றுமாறு சிறிலங்காவையே கோரமுடியும்.

இவ்வாறான கருத்துக்களுக்காக விடுதலைப்புலிகள் இயக்கம் சமாதான முயற்சிகளில் அக்கறை அற்றிருப்பதாகவோ அன்றி விட்டுக் கொடுப்பின்றி நிபந்தனைகளை விதிப்பதாகவோ அர்த்தம் கொள்வது தவறாகும். இடைக்கால நிர் வாகம் உருவாக்குவது குறித்து இனிப்பேச்சுக்களை நடத்துவதானது ஏற்கனவே பேசியவற்றை மீண்டும் பேசுவது தேவையற்றது. அது காலவிரயத்தையும், நேர விரயத்தையுமே கொடுக்கும் என்பதோடு, அரசாங்கம் தற்பொழுது முன் வைக்கும் இடைக்கால நிர்வாகசபை என்பது பரிசீலனைக்கு ஏற்றுக் கொள்ளத்தக்கதல்ல என்றதன் அடிப்படையிலுமே ஆகும்.

ஆனால், பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவே பந்தைப் புலிகள் பக்கம் எறிந்துவிடப் பார்க்கிறார். அரசாங்கம் இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்களை நடத்தவும், சமாதானப் பேச்சுவார்த்தைகளை நடத்தவும் தயாராகவுள்ளது போன்ற தொரு தோற்றப்பாட்டை உள்நாட்டிலும், வெளிநாட்டிலுமாக உருவாக்க முயல்கின்றார். இதன் மூலம், விடுதலைப் புலிகள் மீது நிர்ப்பந்தங்களை உருவாக்கிஅவர்களைப் பேச்சுவார்த்தை மேசைக்குக் கொண்டு வருவதன் மூலம், டோக்கியோ மாநாட்டில் உதவி வழங்குவோர் அளித்த வாக்குறுதிகளின் அடிப்படையில் நிதி உதவிகளைப் பெற்றுக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கின்றார்.

சிறிலங்கா அரசு சர்வதேச நாடுகளிடம் இருந்து நிதி உதவிகளைப் பெறுவதற்கோ அவற்றைத் தமது தேவைக்குப் பயன்படுத்துவதற்கோ புலிகள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை. யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட வடக்கு-கிழக்கிற் கெனப் பெறப்படும் நிதியானது வடக்கு-கிழக்கில், வடக்கு-கிழக்கு மக்களுக்குப் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதையே விரும்புகின்றனர். அவ்வாறு அந்நிதி பயன்படுத்தப்படு வதற்கான வழிவகை காணப்படும் பட்சத்திலேயே அதற்கான பொறுப்பை ஏற்கவிரும்புகின்றனர். அவ்வாறு இல்லாது புலிகளைப் பொம்மைகளாக்கி ஆட்சியாளர்கள் நன்மை படைய புலிகள் ஒத்துழைக்க வேண்டுமென எதிர்பார்ப்பது தவறாகும்.

# சமாதான முயற்சியில் புலிகள் அர்ப்பணிப்புடன் செயற்படுகின்றனர்

## - கொழும்பில் புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

சமாதான முயற்சியில் புலிகள் முழுமையான அர்ப்பணிப்புடன் ஈடு பட்டுவருவதாக புலிகளின் சமாதான செயலக பணிப்பாளர் புலித்தேவன் கூறியுள்ளார்.

கொழும்புக்கு விஜயம் செய்துள்ள அவர் தனியார் தொலைக் காட்சி ஒன்றுக்கு செவ்வியளிக்கும் போதே இவ்வாறு கூறியுள்ளார். அத்துடன் பொ.ஐ. முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தான் சந்தித்ததாக எழுந்துள்ள செய்தியை அவர் மறுத்துள்ளார்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசுடனேயே புலிகள் சமாதானப் பேச்சு வார்த்தையை நடாத்துவார்கள் எனக் கூறிய அவர். பொ.ஐ. முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர்களைத் தான் சந்தித்ததாக வெளிவந்துள்ள செய்தி தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்துவதாகக் கூறியுள்ளார்.

# இனப்பிரச்சினைக்கு பேச்சின் மூலமே தீர்வு ஜே. வி. பி. யும் இணங்கியுள்ளது

## - சனாதிபதி சந்திரிகா அறிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் இனப்பிரச்சினைக்கு யுத்தத்தின் மூலமல்லாமல் அரசியல் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு கான முடியும் என்பதற்கு ஜே.வி.பி. இணக்கம் தெரிவித்துள்ளதாக சனாதிபதி தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சி ஒன்றிற்கு அவர் அளித்துள்ள பேட்டியின் போது இத்தகவலை வெளியிட்டுள்ளார்.

அரசியல் தீர்வுகாண்பதற்கு புலிகளுடன் பேச்சுவார்த்தைகள் நடத்துவது என்ற தமது தீர்மானத்திற்கு எவ்வித மாற்றமும் இல்லையென அவர் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுக்கள் பொ.ஐ. முன்னணியினாலேயே பல வருடங்களுக்கு முன்பு ஆரம்பிக்கப்பட்டன. இப்பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு ஐ.தே. கட்சி நடவடிக்கை மேற்கொள்வதையிட்டு தான் மகிழ்ச்சியடைவதாகக் கூறியுள்ளார்.

பொ.ஐ. முன்னணி மீண்டும் அரசை அமைக்கும் பட்சத்தில் சமாதானப் பேச்சுக்கள் தொடர்ந்து மேற்கொள்ளப்படும் எனவும் சனாதிபதி கூறியுள்ளார்.

# பிரதமர் அலுவலக ஊழியர் எனக் கூறி நிதி மோசடி புரிந்த இளைஞன் கைது

(கொழும்பு)

பிரதமரின் அலுவலக ஊழியர் என்றும்அவருக்கு நெருக்கமானவர் எனவும் கூறி மோசடிகளைப் புரிந்துவந்த இளைஞரொருவரை கிருலப்பனை பொலிசார் நேற்று கைது செய்தனர்.

இந்த இளைஞர் பல்வேறு நபர்களுக்கு உதவுவதாகக் கூறி அவர்களிடமிருந்த சுமார் எட்டு இலட்சம் ரூபாவை மோசடியாகப் பெற்றுள்ளார் என்று பொலிஸ் விசாரணைகளில் தெரிய வந்துள்ளது

கொழும்பிலுள்ள உயர் பாடசாலையொன்றில் கல்வி கற்று கொள்ளுப்பிட்டியில் வசிக்கும் இருபது வயது இளைஞரே இவ்விதம் மோசடி புரிந்துள்ளார்.

பிரதமரிடம் நெருங்கிய தொடர்புடையவர் எனக் கூறிக் கொண்டு வாகனங்கள் மற்றும் மதுபான சாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களைத் தம்மால் பெற்றுத்தர முடியும் எனக் கூறி அவர் நிதி மோசடி புரிந்துள்ளார். தெகிவளை, கோட்டே, கண்டி ஆகிய இடங்களைச் சேர்ந்தவர்களிடமிருந்து இவர் பணம் பெற்றுள்ளார் என அறிவிக்கப்படுகின்றது.

# களத்தில் இருந்து வெளியேறிய ஸ்மித் சில நிமிடங்களில் மாரடைப்பால் மரணம்

இங்கிலாந்து கழகங்களுக்கிடையிலான லீக் கிரிக்கெட் போட்டி ஒன்றில் 93 ஓட்டங்களைப் பெற்ற வீரர் ஒருவர் களத்தில் இருந்து வெளியேறிய சில நிமிடங்களில் மரணமான சம்பவம் ஒன்று கடந்த சனிக்கிழமை இங்கிலாந்தில் இடம் பெற்றுள்ளது.

குயின்ஸ்பரி கிரிக்கெட் கழக வீரரான ரிச்சர்ட் ஸ்மித்தே இவ்வாறு மரணமானார்.

29 வயதான இவர் அதிரடி வீரராவார்.


இதேவேளை, ரிச்சர்ட் ஸ்மித்தின் தந்தையான டேவிட் தனது 47ஆவது வயதில் போட்டியின் போது பந்து வீசிக் கொண்டிருந்தவேளைமாரடைப்பால் மரணமடைந்தமை குறிப்பிடத்தக்கது.

இப்போட்டி 1985ஆம் ஆண்டு நடைபெற்றது.

## உலக 'கோல்வ்' போட்டியில் இல. தமிழ் சிறுவன் சாம்பியன்

இலங்கைத் தமிழ் சிறுவனான கனடாவில் வாழும் கஜன் சிவபாலசிங்கம், அமெரிக்காவில் நடைபெற்ற உலகளாவிய "கோல்வ்" போட்டியில் சிறுவர் பிரிவில் சாம்பியன் பட்டத்தை வென்றுள்ளான்."கனடாவின் சின்னப்புலி" (Canada's Little Tiger) என அழைக்கப்படும் இந்தச் சிறுவனுக்கு வயது ஒன்பதேயாகும்.

'கோல்வ்' விளையாட்டில் உலகின் முதல்தர வீரரான ரைகர் வூட்ஸ்ஸின் வாரிசாக - விளையாட்டு, வல்லுநர்களால் கருதப்படுவதால்கருதப்படுவதால் இவனை லிட்டில் ரைகர் என்று அழைக்கின்றனர். கஜன்- கனடா நாட்டின் சார்பாக, உலக அளவிலான போட்டிகளில் விளையாடும் மிகச்சிறிய வயதானவன் என்பது குறிப்பிடத் தக்கது.




## தலைவராகத் தெரிவு

சர்வதேச கிரிக்கெட் சபையின் புதிய தலைவராக பாகிஸ்தானைச் சேர்ந்த இஸாக் மானி பதவி ஏற்றுக் கொண்டுள்ளார்.

சர்வதேச கிரிக்கெட் சபையின் தலைவராக இருந்த மாரும் கிரேட்டின் இரண்டாண்டு காலப் பதவிக்காலம் நேற்று முன்தினம் முடிவடைந்துள்ளது.

இதனையடுத்து சுழற்சி முறையில் புதிய சர்வதேசக் கிரிக்கெட் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்ட பாகிஸ்தானைச் சேர்ந்த இஸாக்மானி நேற்று முன்தினம் பதவியேற்றுக் கொண்டுள்ளார். பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய அவர்,கிரிக்கெட் வளர்ச்சிக்காகப்பாடுபடப் போவதாகக் கூறியுள்ளார்.

# விம்பிள்டன் டென்னிஸ் போட்டி திங்கட்கிழமை பிரிட்டனில் ஆரம்பம்

உலகப் புகழ்பெற்ற விம்பிள்டன் டென்னிஸ் போட்டிகள் பிரிட்டனில் எதிர்வரும் திங்கட்கிழமை தொடங்குகின்றன.

இப்போட்டிகளில் பங்கேற்கும் வீரர்களும், வீராங்கனைகளும் மைதானத்தில் தொடர்ந்து தீவிர பயிற்சிகளில் ஈடுபட்டு வருகின்றனர். ஆடவர் ஒற்றையர் பிரிவில் நடப்பு சாம்பியனாக திகழும் அவுஸ்திரேலிய வீரர் ஹெவிட்டுக்கும், அமெரிக்காவின் ஆந்திரே அகாஸிக்கும் இடையே பட்டத்தைக் கைபற்ற கடும் போட்டி இருக்கும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இதேபோல் மகளிர் பிரிவில் நடப்பு சாம்பியனான செரீனா வில்லியம்சிற்கு பெல்ஜியம் வீராங்கனைகளான கிளியம் கிளிஸ்ரர், ஜஸ்டின் ஹெனின் ஆகியோர் கடும் சவாலாக இருப்பார்கள்.

இதனால் போட்டியின் முடிவைக் காண உலகம் முழுவதுமுள்ள டென்னிஸ் ஆர்வலர்கள் மிகுந்த ஆர்வத்துடன் எதிர்பார்க்கின்றனர்.

# போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு

## மன்னார் வெகுசன அமைப்புக்கள் சந்திப்பு

### படையினரின் மீறல்கள் குறித்து கலந்துரையாடல்

(மன்னார்)

மன்னார் வெகுசன அமைப்பு ஒன்றியம் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவைச் சந்தித்துள்ளது.

நேற்று முன்தினம் மாலை மன்னார் வெகுசன அமைப்புக்களின் ஒன்றியம் மன்னார் மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினரைச் சந்தித்து சர்வதேச கடற்பரப்பில் புலிகளின் வியாபாரக் கப்பல் தாக்கப்பட்டமை தொடர்பாகவும் தலைமன்னார் கடற்பரப்பில் தொடர்ந்தும் இந்திய மீனவர்கள் தொழிலில் ஈடுபட்டு வருகின்றமை நிறுத்தப்படவேண்டும், மன்னார் நகர்ப்பகுதிகளில் ரோந்து நடவடிக்கைகள் மற்றும் இராணுவத்தினர் புதிய காவலரண்களை நிறுவருகின்றமை நிறுத்தப்படவேண்டும் என்பன போன்ற கோரிக்கைகளை முன்வைத்தனர்.

இதன் போது போர் நிறுத்தக் கண்காணிப்புப் பிரிவினர் கருத்துத் தெரிவிக்கையில், புலிகளின் வியாபாரக் கப்பல் தாக்கப்பட்டமை தொடர்பாக தாம் கொழும்பிற்கு தொடர்பு கொண்டு கேட்டு அது தொடர்பான தகவல் தருவதாகவும், ஏனைய இரண்டு விடயங்களையும் தமது கவனத்தில் எடுத்து அது தொடர்பாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் கதைப்பதாகவும் தெரிவித்துள்ளனர். (மி)

## பிற்போடப்பட்டுள்ளது

நாளை ஞாயிற்றுக்கிழமை நடைபெற இருந்த தூயவனின் "சமரும் மருத்துவமும்" வெளியீட்டு விழா தவிர்க்க முடியாத காரணத்தால் அன்று நடைபெறாது என்பதனையும் வெளியீட்டு விழாத் திகதி பின்னர் அறிவிக்கப்படும் எனவும் தமிழீழ கலைபண்பாட்டுக் கழகம் அறியத்தந்துள்ளது.

# பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் திரை அச்சுப்பதிப்பு பயிற்சி

(அலுவலக செய்தியாளர்)

சமுதாய முன்னேற்ற நிலையத்தினரின் கிளிநொச்சி ஜெயந்திநகரில் அமைந்துள்ள பெண்கள் தொழிற்பயிற்சி நிலையத்தில் நேற்று திரை அச்சுப்பதிப்பு பயிற்சி வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டன.

வவுனியா மாவட்ட கைத்தொழில் அபிவிருத்திச் சபையினரால் இம்பீரியல் சர்வதேச தனியார் நிறுவன ஒழுங்கமைப்பாளர்களினால் நேற்றுப்பகல் 11.00 மணிக்கு மேற்படி பயிற்சி வகுப்பு ஆரம்பித்து வைக்கப்பட்டது.




ஆரம்ப நிகழ்வாக மங்கல விளக்கேற்றலைத் தொடர்ந்து தமிழீழத் தேசியக் கொடியினை மாவீரர், போராளி குடும்பநல மகளிர் பொறுப்பாளர் அம்மணி ஏற்றிவைக்க அகவணக்கத்துடன் பெண்கள் வேலைத்திட்டப் பகுதி நிர்வாக அலுவலர் திருமதி.விஜியணி தலைமையில் நிகழ்வுகள் ஆரம்பமாகின. கைத்தொழில் அபிவிருத்திச்சபை வவுனியா காரியாலய அதிகாரி ஜெயன் மனோச், இம்பீரியல் சர்வதேச தனியார் நிறுவன ஒழுங்கமைப்பாளர் பற்றிக் ஆகியோர் கருத்துரை வழங்கினர்.

சமுதாய முன்னேற்ற நிலைய இயக்குனர் சிரஞ்சீவி மற்றும் நிறுவன ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

மேற்படி பயிற்சியில் 50 பேர் இணைந்து கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. இன்னும் பயிற்சி நெறி இடம்பெற்று மீண்டும் ஓரிரு வாரங்களின் பின் மீள் பயிற்சி இடம்பெற்று பயிற்சியாளர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்படுமென இம்பீரியல் சர்வதேச தனியார் நிறுவன ஒழுங்கமைப்பாளர் பற்றிக் தெரிவித்தார். (சோ)

### - நடவடிக்கைக்குழுவிலிருந்து -

# நீக்கப்பட்ட செய்திக்கு ஆனந்தசங்கரி மறுப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நடவடிக்கைக் குழுவில் இருந்து தாம் நீக்கப்பட்டதாக வெளியான செய்திகளுக்கு மறுப்புத் தெரிவித்து ஆனந்தசங்கரி அறிக்கை ஒன்றை விடுத்துள்ளார்.

அண்மைக் காலமாகவே கூட்டமைப்பின் கூட்டத்தில் தான் கலந்து கொள்ளாமை காரணமாகவே தனது இடத்துக்கு வேறொருவர் தெரிவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

ஆரம்ப கூட்டங்களில் தான் கலந்துகொண்டு தனது கருத்துக்களை தெரிவித்து வந்ததாகவும் ஆனால் சமீபகாலமாக கூட்டமைப்பின் கூட்டங்களில் கலந்துகொள்வதைத் தவிர்த்து வந்ததாக அவர் கூறியுள்ளார்.

இதனாலேயே தனது இடத்துக்கு வேறொருவர் நியமிக்கப்பட்டுள்ளதாக அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அவசர கலந்துரையாடல்

(அலுவலக செய்தியாளர்)

சுகாதார தரிசிப்பாளர்களுக்கான அவசர கலந்துரையாடல் ஒன்று நடைபெறவுள்ளது.

கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களில் கடமையாற்றும் சுகாதார தரிசிப்பாளர்களுக்கான மேற்படி கலந்துரையாடல் எதிர்வரும் 23ஆம் திகதி கிளிநொச்சி சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது. மேற்படி கலந்துரையாடலில் சுகாதாரத் தொண்டர்களைத் தவறாது கலந்து கொள்ளுமாறு கிளி/ முல்லை சுகாதார தரிசிப்பாளர் சங்கம் கேட்டுள்ளது. (பா)

# கோண்டாவில் குழு மோதல்; வாள் வெட்டில் மூவர் காயம்!

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் கோண்டாவில் பகுதியில் இடம்பெற்ற வாள்வெட்டுச் சம்பவத்தில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முன்தினம் இடம்பெற்றது. இப்பகுதியில் ஒரு யுவதி மீது அங்கு சேஷ்டை புரிந்த ஒரு குழுவுக்கும் அதனைத் தடுக்க முயன்ற இன்னொரு குழுவுக்கும் இடையே ஏற்பட்ட அடிதடி கைகலப்பேபின்னர் வாள்வெட்டில் முடிவடைந்துள்ளது.

காயமடைந்தவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் மூவர் பொலிசாரால் கைது செய்யப்பட்டுள்ளனர். (33)

## மாதாந்த சங்கமம்

(உடையார் கட்டு)

புதுக்குடியிருப்பு பிரதேச தேசிய எழுச்சிப்பேரவையின் மாதாந்த சங்கம நிகழ்வு இன்று மு.ப.10.00 மணிக்கு அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் நடைபெறுமென புதுக்குடியிருப்புப் பிரதேசப்பொறுப்பாளர் பிறையாளன் தெரிவித்துள்ளார். (19)

### - வடக்கு-கிழக்கு மாகாண -

# உள்ளூராட்சித் தேர்தல்கள் 2004 ஜனவரிக்கு ஒத்திவைப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு மாகாண உள்ளூராட்சிச் சபைகளுக்கான தேர்தல் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளதாக தேர்தல் ஆணையாளர் தெரிவித்துள்ளார்.

மூன்றாவதுத் தடவையாக ஒத்திவைக்கப்பட்டுள்ள இத்தேர்தல் எதிர்வரும் 2004 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 24 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கடந்த 2002 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பத்தாம் திகதி ஏற்றுக்கொள்ளப்பட்ட மொத்தம் 53 உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல் கடந்த மார்ச் மாதம் 25 ஆம் திகதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டது.

கடந்த 2002 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி அன்றும் 2003 ஆம் ஆண்டு யூன் 25 ஆம் திகதி அன்றும் ஆறு மாதங்களுக்கு ஒரு தடவை ஒத்திவைக்கப்பட்டு வந்த உள்ளூராட்சிச் சபைத் தேர்தல்கள் மேலும் ஆறு மாதங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

மாவட்டத் தேர்தல் அத்தாட்சி அலுவலர்கள் தேர்தல் நடத்துவதற்கு உகந்ததாக சூழ்நிலை காணப்படுவதாக இல்லை என தெரிவித்ததை அடுத்தே தேர்தல்கள் ஒத்தி வைக்கப்பட்டுள்ளன.

# போதனாசிரியர் பதவிக்கான நேர்முகத் தேர்வு கொழும்பில்

(அலுவலக செய்தியாளர்)

போதனாசிரியர் பதவிக்கான நேர்முகத் தேர்வு கொழும்பில் நடைபெறவுள்ளது.

மேற்படி தேர்வு எதிர்வரும் 25ஆம் திகதி இலங்கை தொழிற் பயிற்சி அதிகாரசபை 354 எல்விற்றிக்கல மாவத்தை, நாரஹேன் பிட்டிய, கொழும்பு 05 எனும் முகவரியில் நடைபெறவுள்ளதால் எஸ். ஜெயக்குமார் (இல. 91 ஸ்கந்தபுரம், கிளி.), எம். பிரகாஸ் (30 வீட்டுத் திட்டம் இல. 01 விநாயகநகர்), கே. உமாதேவி (இல. 42, கனகபுரம்), ஏ. மேரி கொலஸ்ரிகா ( மொடேன் ரெக்ஸ், டிப்போ வீதி, அம்பாள் குளம்), எஸ். விஜயராஜா (இல. 61, திருநகர், கிளிநொச்சி) ஆகியோர் மேற்படி திகதியில் நேர்முகத் தேர்விற்குத் தோற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர். (பா)

### 3 மணிக்குப் பின்...

தினுள் செல்ல முடியாது என உத்தரவிட்டுள்ளதால் மாணவர்கள் விளையாட்டு மைதானத்திற்குச் செல்லமுடியாதுள்ளது.

இதேவேளை பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் கல்லூரி மாணவிகளை இராணுவத்தினர் சோதனையிடுவதை நிறுத்தவேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

# புதிய அமெரிக்கத் தூதராக ஜெப்ரிஜே லங்சட் நியமனம்

(கொழும்பு)

சிறிலங்காவிற்கான புதிய அமெரிக்கத் தூதுவராக ஜெப்ரிஜே லங்சட் நியமிக்கப்படவுள்ளதாக அதிகாரபூர்வமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

1977 ஆம் ஆண்டில் இருந்து அமெரிக்காவின் வெளிவிவகாரத் துறையில் பணியாற்றிவரும் இவர் இந்தியா, பாகிஸ்தான், பங்களாதேஷ், மலேசியா போன்ற நாடுகளிலும் பணியாற்றியுள்ளார்.

ஆப்கானிஸ்தான், பங்களாதேஷ், பாகிஸ்தானுக்கான தெற்காசிய அமைப்பின் நிர்வாகியாகவும் இவர் அமெரிக்காவில் செயலாற்றியுள்ளார்.

### இடைக்கால...

பிரதமரின் விருப்பம் மட்டும் பேச்சுவார்த்தைக்கு அடிப்படையாக அமைய முடியாது முட்டுக்கட்டையான அரசியல் யாப்பு மற்றும் சிறிலங்கா சனாதிபதியின் பகைமை ஆகிய நெருக்கடிகளுக்கிடையில் செயற்படும் பிரதமர் தலைமையிலான அரசு இடைக்கால நிர்வாகம் என்ற பெயரில் உருப்படியான எதனையும் வழங்க தயங்கி வருகிறது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை இடைக்கால நிர்வாகம் குறித்த நடைமுறைச் சாத்தியக்கூறுகளை முன்வைக்குமாறு புலிகளை சிறிலங்கா அரசு கோரி வருவதாகவும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் விசனம் தெரிவித்துள்ளார். இந்நிலையில் புலிகளுக்கு எவ்வளவு தூரம் அரசியல் நிர்வாக அதிகாரங்களை சிறிலங்கா அரசு வழங்கும் என்ற தெளிவில்லாமல் இடைக்கால நிர்வாகத்தின் கட்டமைப்பு குறித்து புலிகள் கருத்து வெளியிடுவது விவேகமான செயல் அல்ல, இக் காரணத்திற்காகவே இடைக்கால நிர்வாக சபைதொடர்பான பரிந்துரைகளை சிறிலங்கா அரசு முன்வைக்க வேண்டும் என தாங்கள் கேட்டு வருவதாகவும் அவர் கூறியுள்ளார்.

டோக்கியோ பிரகடனத்தில் வெளியிடப்பட்ட வழிமுறைகளை நிராகரிப்பதாகத் தெரிவித்துள்ள அவர் பிற்கால பேச்சுவார்த்தைக்கு அப்பிரகடனம் அடிப்படையாக அமையமுடியாது எனவும் சமாதான முயற்சிகள் முழுவதும் மாற்றியமைக்க வேண்டுமென புலிகள் வலியுறுத்துவதாகவும் தெரிவித்தார்.

பிற்கால பேச்சுவார்த்தைகள் புதிய மற்றும் மீள் வரையறுக்கப்பட்ட கருத்துக்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்பட வேண்டும்.

இது தொடர்பாக நோர்வே நாட்டின் அனுசரணையாளர்களிடம் கலந்துரையாடியிருப்பதாகவும் அன்ரன் பாலசிங்கம் அவர்கள் கூறியுள்ளார்.

### கொழும்பின்...

பிட்டி ஆகிய பகுதிகளே சுற்றிவளைக்கப்பட்டு தேடுதல்கள் இடம்பெற்றதுடன், குறிப்பாக வாகனங்கள் அக்கு வேறு ஆணி வேறாக சோதனைக்கு உள்ளாக்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகிறது.

### தும்பளையில்...

படையினரின் இந்தத் திடீர் நடவடிக்கை காரணமாக பொது மக்கள் பெரும் அசௌகரியங்களை எதிர் நோக்கி உள்ளனர். அத்துடன் படையினர் தற்போது அடையாள அட்டையினைக் கோருவதால் மக்கள் எங்கு சென்றாலும் அடையாள அட்டையுடன் செல்லவேண்டிய அவலநிலை தோன்றி இருப்பதாக மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர். (33)

### ரணில் இடைக்கால...

விக்கிரமசிங்க இடைக்கால நிர்வாகம் குறித்து பேச்சுக்கள் நடாத்த வருமாறு விடுதலைப்புலிகளுக்கு அறிவித்தல் விடுத்துள்ளார். இவ்வறிவித்தலானது, விடுதலைப் புலிகளால் ஏற்றுக்கொள்ளத் தக்கதாக இருக்கமாட்டாது என்பது கூட பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவால் உணரப்பட்டதாகவே இருக்க முடியும்.

ஏனெனில் தற்பொழுது அரசாங்கம் தெரிவித்துள்ள ஆலோசனைக்கும் விடுதலைப்புலிகள் கோரிவரும் இடைக்கால நிர்வாகக் கட்டமைப்பிற்குமான பாரிய இடைவெளி உள்ளதென்பது அவர்களுக்குத் தெரிந்ததொன்றே.

அவ்வாறு இருப்பினும் பிரதமர் ரணில் இடைக்கால நிர்வாகம் குறித்து அறிவிப்புக்களைச் செய்வதானது சமாதான முயற்சிகளில் அரசாங்கம் தீவிர ஈடுபாட்டைக் கொண்டுள்ளதாக காட்டிக்கொள்வதற்காகவே என அரசியல் விமர்சகர்கள் தெரிவிக்கின்றனர்.

### கொழும்பு தெற்கில்...

யும் விட இருமடங்காகும் என்று துறைமுக அபிவிருத்திக் கப்பல் போக்குவரத்து அமைச்சு அறிவித்துள்ளது. இங்கு 12 கொள்கலன் இறங்குதுறைகளும் அமைக்கப்படவுள்ளன.

நவீன வசதியுடன் கூடிய இந்தத் துறைமுகத்துக்கு 180 கோடி அமெரிக்க டொலர் செலவாகவுள்ளது.

புதிய துறைமுகத்துக்கான ஆலோசனைகளை பிரிட்டனின் ஸ்கொட் வில்ஸ் நிறுவனம் வழங்கவுள்ளது. இந்த ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு துறைமுகங்கள் கப்பல் போக்குவரத்து அமைச்சர் ரவூப் ஹக்கீமின் தலைமையில் நடைபெற்றது.

## தவறவிட்டது

மு/திருமுறிகண்டி இந்து வித்தியாலய அதிபர் ஆகிய திரு.ஆ.குகதாசன் என்பவரின் சிறிய "மணிபேஸ்" 20.06.2003 முறிகண்டிக்கும் மாங்குளத்திற்கும் இடையே தவறவிடப்பட்டுள்ளது. இதனுள் பாடசாலை யுடன் தொடர்புடைய பற்றுச்சீட்டுகளும் அடையாள அட்டைகளும், பயண அனுமதி அட்டைகள், அ.அ.இல: 673531296 V உட்பட சில ஆவணங்களும் அடங்கியுள்ளன. இதனைக் கண்டெடுத்தவர்கள் தயவு செய்து புலிகளின் குரல் தொடர்பகங்களிலோ அல்லது திருமுறிகண்டி இந்து வித்தியாலயத்திலோ அல்லது ஈழநாதம் பணிமனையிலோ ஒப்படைக்குமாறு தயவுடன் கேட்டுக் கொள்கின்றேன். தகுந்த சன்மானம் வழங்கப்படும். (3342)

இப்பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2003ம் ஆண்டு ஜூன் மாதம் 21ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.